

நாமக்கல் மாவட்ட திருக்கோயில்கள் வழிகாட்டி

திருக்கோயில்கள் வழிகாட்டி

நாமக்கல் மாவட்டம்



நாமக்கல் மாவட்ட திருக்கோயில்கள் வழிகாட்டி

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை



திருக்கோயில்கள் வழிகாட்டி



நாமக்கல் மாவட்ட
திருக்கோயில்கள் வழிகாட்டி

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

முதற்பதிப்பு	:	ஆகஸ்ட் 2014
முன் அட்டை	:	அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி நாமக்கல்
பின் அட்டை	:	அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் உற்சவர் திருமேனி திருச்செங்கோடு
உள் அட்டை	:	அருள்மிகு நரசிம்ம சுவாமி நாமக்கல்
பக்கங்கள்	:	180 (அட்டை, வரைபடம் உட்பட)
அச்சிடுவோர்	:	ஸ்ரீ கௌரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சேலம்
விலை	:	₹ 110.00
உரிமை	:	ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை தமிழ்நாடு அரசு

அமைதி – வளர்ச்சி – வளமை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்

பூ.செந்தூர்பாண்டியன்
இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

வாழ்த்துச் செய்தி

“ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்பது ஆன்றவிந்து அடங்கிய ஆன்றோர் கூறிய அமுத மொழியாகும். அந்த அமுத மொழியை தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஆலய வழிபாடுகளை முறையாகச் செய்து மேன்மை பெற்றவர்கள் நம் முன்னோர்கள்.

மன்னவர்களும் அவர்களை அருள்வழியில் செலுத்திய இறையருள் பெற்ற முன்னவர்களும் இப்பெரு மக்களைப் பின்தொடர்ந்த பின்னவர்களும் பக்தியுடன் எழுப்பிய இறைமாளிகைகளே திருக்கோயில்களாக மிளிர்கின்றன, ஒளிர்கின்றன. நமது தமிழகத்தில் ஆயிரக்கணக்கில் திகழும் திருக்கோயில்கள் நம்பிக்கையின் சின்னங்கள்.

“நம்பினார் கெடுவதில்லை – இது
நான்கு மறை தீர்ப்பு
நல்லவர்க்கும் ஏழையர்க்கும்
ஆண்டவனே காப்பு”

என்னும் பாடல் வரிகள் திருக்கோயில்களின் மேன்மையைக் காட்டும் வைரவரிகள் ஆகும். நாமக்கல் மாவட்டம் ஞாலம் போற்றும் திருக்கோயில்கள் பலவற்றைப் பெற்றுள்ளது.

மும்மூர்த்தி ஸ்தலமாகிய நாமக்கல் நரசிம்ம சுவாமி, ஆஞ்நேயர் திருக்கோயில், திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலமாகிய திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர், அருணகிரி நாதரால் பாடல் பெற்ற செங்கோட்டுவேலவர், வைப்பு ஸ்தலமாகிய கொல்லிமலை அருள்மிகு அறப்பளீஸ்வரர் திருக்கோயில் போன்ற திருத்தலங்கள் இம்மாவட்டத்தில் சிறப்பு வாய்ந்தவை.

இத்திருத்தலங்களைப் பற்றிய, திருக்கோயில்களைப் பற்றிய ”திருக்கோயில்கள் வழிகாட்டி” நூலை வெளியிடுவது சிறந்ததொரு ஆன்மீகப் பணியாகும் ; அன்பர் பணியுமாகும்.

நூல் சிறக்க நல்வாழ்த்துக்கள்...

P. [signature]

(பூ.செந்தூர் பாண்டியன்)

முனைவர். ரா.கண்ணன் இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமை செயலாளர்,

சுற்றுலா, பண்பாடு
மற்றும் அறநிலையங்கள் துறை
தலைமை செயலகம்
சென்னை – 600 009
தொலைபேசி : 044 – 25670820

வாழ்த்துரை

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களைப் பற்றிய வரலாறுகளை மாவட்ட வாரியாக எழுதி வெளியிடுவது காலத்தின் தேவையாக உள்ளது. இதனை ஆன்மீக அன்பர்கள் பெரிதும் எதிர்நோக்கியுள்ளனர். தமிழக நாகரிகம் திருக்கோயில் நாகரிகமே.

"கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"
"திருக்கோவிலில்லாத திருவிலூர்
..... ஊரல்ல அடவி காடே"

என்னும் கருத்தாழம் தமிழக மக்களிடையே அழுந்தி உள்ளது. வாழ்க்கை சூழல் மற்றும் காலவளர்ச்சியில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ளத் துணியும்போது ஏற்படும் மனச்சலனங்கள் ஆன்மீகத் தேடல்களை அதிகரித்துள்ளன. பாடல் பெற்ற தலங்கள், பரிகாரத்தலங்கள், மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில்கள், இராசித்தலங்கள் என மக்கள் தங்களின் தேவைகளுக்கேற்ற திருத்தலங்களை நோக்கி பயணிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஒரு கோயிலைப் பார்க்கும்போது அதில் உள்ள கற்சிற்பங்கள், மரச்சிற்பங்கள் மற்றும் பண்டைய ஓவியங்கள் என அக்கோயிலின் தல வரலாற்றை எடுத்துரைக்க அங்கு எவரும் இலர். பல கோயில்களில் இராமாயணம், மகாபாரதம், திருவிளையாடல் புராணம் போன்ற காப்பியங்களில் வரும் புராண வரலாற்றுக்காலத்தில் இறைவன் நடத்திய திருவிளையாடல்கள் காட்சிப்படுத்தவதன் மூலம் எடுத்துரைக்கப் படுகின்றன. உதாரணமாக திருப்புடைமருதூர் இராஜகோபுரம் ஓவியங்கள், திருக்குற்றால சித்திரசபை ஓவியங்கள் போன்றவை. அதனால் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும் வழிகாட்டி நூல் செல்லும் கோயில்களைப் பற்றி அறிவதற்கு இன்றியமையாததாக இருக்கிறது.

மேலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக இந்து மதத்தின்மீதும், இந்துவின் பண்டைய கலாச்சாரத்தை அறியவும், தங்கள் பயணத்திட்டங்களை வகுக்கவும் இவ்வழிகாட்டிநூல் நல்ல உறுதுணையாக அமையும்.

மாவட்டந்தோறும் இவ்வழிகாட்டி நூல்கள் இந்து சமய அறநிலையத்துறையினரால் வெளியிட்டமைக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள். எல்லா மாவட்டங்களையும் அடக்கிய மாநில அளவிலான ஒரு வழிகாட்டி நூலையும், மாவட்ட நூல்களைச் சுருக்கி வெளியிட வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு வாழ்த்துகிறேன்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது அவ்வை பிராட்டியாரின் நல்லுரையாகும். அறம் காத்த பண்டைத்தமிழ் மன்னர்கள் அற சின்னங்களாக ஆலயங்களை எழுப்பி தத்தம் இயல்பிற்கேற்றவாறு பொன்னும், பொருளும் வழங்கி அவைகளை பண்புக் களஞ்சியங்களாக உருவாக்கி வைத்துள்ளனர். அண்டை நாட்டார் வந்து வியந்து போற்றும் கவின்கலை சிற்பங்களையும், ஓவியக் கலைகளையும், ஒவ்வொருவரும் கண்டு பேருவகை கொள்ள வேண்டிய ஒன்றாகும். திருக்கோயிலின் தொன்மை கருதி மாவட்டந்தோறும் உள்ள திருக்கோயில்களுக்குச் சென்று கண்ணாரக் கண்டு நெஞ்சுருகி நின்று நினைந்தேத்தி வழிபட ஏதுவாக மாவட்டக் கையேடு தல வரலாற்றோடு வெளியிடுவது பக்தர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

இக்கையேடு வெளியிடுவதற்கு தலவரலாறு முதல் அப்பகுதி திருக்கோயில்களின் தனிச்சிறப்புகள் வரை கொடுத்துதவி, மாவட்டந்தோறும் இந்நூல் வெளியிட உறுதுணை புரிந்த அத்துணை அன்பர்களுக்கும் வாழ்த்துக்கள்.

ரா கண்ணன்
28/05/2014

(முனைவர் ரா.கண்ணன்)

ப.தனபால், எம்.ஏ.,பி.எல்.,
ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை

119, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
அலுவலகம் : 044–28334815
நிகரி : 044–28334816
மின்னஞ்சல் : tn.endowments@tnhrce.org

வாழ்த்துரை

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது திருக்கோயில்கள் தொடர்பான பழமொழி ஆகும்.

கோயில்களை மையமாகக் கொண்டே தம்முடைய வசிப்பிடங்களை நம் முன்னோர்கள் அமைத்துக்கொண்டனர்.

'இரையைத் தேடுவது இவ்வுலக வாழ்க்கைக்கு'
'இறையைத் தேடுவது அவ்வுலக வாழ்க்கைக்கு'

என்னும் இவ்வரிகளை தம் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். இறைவன் எல்லா இடங்களிலும் நிறைந்திருப்பவன். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்குபவன் அவன். அவனது திருவருளை திருக்கோயில்களின் வழியே பெற்றனர் நம் மூதாதையர்கள்.

பசுவின் உடல் முழுவதும் பால்சத்து பரவியிருப்பினும் அப்பால் சத்தினைப் பசுவின் திருமடியிலிருந்தே நாம் பெறுகிறோம் அல்லவா ? நம் திருக்கோயில்களின் தத்துவம் இதுவே.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனது என்றவ ரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!"

என்ற மணிவாசகரின் மணிமொழிக்கேற்ப எல்லாம்வல்ல அந்த இறைவனை திருக்கோயில்களில் கண்டுகளித்தனர். வாழ்த்தினர்.

திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் கடவுளர் மீது இப்பெருமக்கள் கொண்டிருந்த அன்பிற்கு எல்லையே இல்லை.

தங்களது வசிப்பிடங்களாகிய இல்லங்களை அழியக் கூடிய தென்னங்கீற்றுகளையும், பனையோலைகளையும், செங்கற்களையும் கொண்டு அமைத்த நம் முன்னோர்கள் இறைவனின் வசிப்பிடமான கோயில்களை மட்டும் அழிவில்லாத கருங்கற்களால் அமைத்துள்ளனர். அதனால்தான் அரசன்முதல் சாமானியன்வரை

அவரவர் அரண்மனைகளையும், இல்லங்களையும் காப்பதைவிட, ஆலயங்களைக் காத்து வந்தனர். ஆலயங்களைக் காத்துவரும் அரசர்கள் வரிசையில் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** காத்துவரும் தமிழகத் திருக்கோயில்கள் காலத்திற்கும் நிலைபெறுபவைகளாக உள்ளன.

அழிவில்லாத ஆதிக்கு அழிவில்லாத கற்றளிகள்; கற்கோயில்கள்!

இத்தகு சிறப்பு மிக்க திருக்கோயில்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய திருக்கோயில்கள் வழிகாட்டி நூல் வெளியிடுவது சாலச்சிறந்த ஒரு பணியாகும்.

இவ்வழிகாட்டி நூல் வெளிவர உதவிய நல்உள்ளங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து அனைவரும் இறைவன் திருவருளால் எல்லா வளமும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

ப.தனபால்

(ப.தனபால்)

முகவுரை

ஏகம்பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி

நமது திருக்கோயில்கள், நமது முன்னோர்கள், நமக்கு வழங்கிச் சென்றுள்ள கவின்மிகு கலைச்செல்வங்கள் ஆவன ஆகும். அறத்தையும், பண்பாட்டையும் பாதுகாக்கும் சிறந்த அரண்களாக நமது திருக்கோயில்கள் விளங்குகின்றன.

உலகில் உள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கையில் பாதிக்குமேல் இந்தியாவில் உள்ளது. இந்தியாவில் உள்ள திருக்கோயில்களில் பாதி தமிழகத்தில்தான் உள்ளது. எனவேதான் நமது சமயச்சான்றோடு தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!! என்று சான்றோர்கள் புகழ்ந்துரைத்துள்ளனர்.

தமிழகத்தின் தென்மேற்குப் பகுதியாக விளங்கும் கொங்கு வளநாட்டில் சேலம் மாநகருக்கு தெற்காக 50 கி.மீ. தொலைவில் நாமக்கல் மாவட்டம் அமைந்து விளங்குகிறது. நாமக்கல் மாவட்டம் இயற்கை எழில் சூழ்ந்த மலைகளும், மலைகளில் பிறந்து குறிஞ்சி, முல்லை, மருத நிலங்களை வளப்படுத்தும் ஆறுகளும் நிறைந்து, நீர்வளமும், நிலவளமும் பெற்ற வளம் மிகுந்த மாவட்டமாகத் திகழ்கிறது. தமிழக அரசவைக் கவிஞராக விளங்கிய இராமலிங்கனார் பிறந்த மண் என்ற சிறப்புக்குரிய இம்மாவட்டம்.

உழைப்பையும், ஊக்கத்தையும் உடைமையாகக் கொண்ட இப்பகுதி மக்களின் அயராத உழைப்பாலும் தளராத முயற்சியாலும் நன்செயும், புன்செயுமாக இருந்த பூமி தற்பொழுது வளர்ந்துவரும் சிறந்த தொழில் நகரமாக விளங்கி வருகிறது. இப்பகுதி மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழ்ந்து இம்மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றனர். இங்கு கோழி வளர்ப்புத்தொழில் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. ஊர்திகளுக்கு மேல்கூடு கட்டும் தொழில் தனிச்சிறப்புடன் விளங்குகிறது. பழக்கவழக்கங்களிலும் பண்பாட்டுச் சிறப்பிலும் சிறந்து விளங்கும் இம்மாவட்ட மக்கள், இயற்கையிலேயே இறைப்பற்றுமிக்கவர்கள்ஆவார்கள். தங்கள் வாழ்வுக்கு வளம் சேர்க்கும் மழையையே சக்தியின் அம்சமாக வழிபடும் வழக்கம், இங்கு தொன்றுதொட்டு நிலவி வருகிறது. சக்தியை பல வடிவங்களில் அன்னைமாரியாகவும், செல்லாண்டி அம்மனாகவும் வழிபடுகிறார்கள். வாழ்க்கையில் வெற்றி பெற வீரத்தின் தெய்வங்களையும், குடும்ப தெய்வங்களாக வழிபட்டு வருகின்றனர். மேலும் சக்தி, முருகன், கணபதி, சிவன், பெருமாள் ஆகிய திருக்கோயில்களைப் பராமரிப்பதிலும் பாதுகாப்பதிலும் தனி அக்கறை கொண்டவர்கள்ஆவார்கள்.

இம்மாவட்டத்தில் புராண வரலாற்றுச் சிறப்புமிக்க நாமக்கல், திருச்செங்கோடு ஆகிய திருத்தலங்களில் காணப்படும் கலைச்சிற்பங்களில் கலைவடித்த சிற்பியின் கற்பனை, கலைத்திறன் கண்டு உணர்ந்து ரசிக்கத்தக்கவை. நாமக்கல் ஆஞ்சநேயர், அருள்மிகு நரசிம்ம சுவாமி திருக்கோயில் ஒரே மலையைக் குடைந்து பல வகைப்பட்ட வடிவங்களில் ஓவியங்களின் அழகு காண்போரின்

கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் தன்மை கொண்டவை. இத்தகைய எண்ணரிய பெருமைகளைக் கொண்ட நாமக்கல் மாவட்ட திருக்கோயில்களின் சிறப்புகளை இக்கையேட்டில் காண்போம்.

தமிழக அரசு திருக்கோயில்களை, அதன் சொத்துக்களை பாதுகாப்பதிலும், திருப்பணிகள் செய்வதிலும் முன்பு எப்பொழுதும் இல்லாத அளவு ஆர்வமும் அக்கறையும் கொண்டு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

நமது திருக்கோயில்களின் சிறப்புகளை பக்தர்கள் அறிந்து பயன்படுத்தும் வகையில் "திருக்கோயில்கள் வழிக்காட்டி" ஒன்றை வெளியிட வேண்டும் என்று ஆணையிட்டு வழங்கிய **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும்,** வாழ்த்துரை வழங்கிய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு **பூ.செந்தூர்பாண்டியன்** அவர்களுக்கும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் முனைவர் **ரா.கண்ணன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் மற்றும் உரிய ஆலோசனைகள் வழங்கி ஊக்கப்படுத்திய ஆணையர் திருமிகு. **ப.தனபால், எம்.ஏ.,பி.எல்.,** அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் இவ்வழிக்காட்டியினை வெளியிட உதவிகள் புரிந்த நாமக்கல் உதவி ஆணையர் திரு. ச.கிருஷ்ணன் அவர்களுக்கும், அருள்மிகு துலுக்க சூடாமணியம்மன் திருக்கோயில் செயல் அலுவலர் சி.கிருஷ்ணன், அருள்மிகு நைனாமலை வரதராஜப் பெருமாள் திருக்கோயில் செயல் அலுவலர் பூ.முத்துசாமி மற்றும் இவ்வழிகாட்டிக்கு

திருக்கோயில்கள் பற்றிய செய்திகள், புகைப்படங்கள் வழங்கிய அனைத்து திருக்கோயில் செயல் அலுவலர்கள்,சரக ஆய்வர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்புத்தகத்தைச் சிறப்பாக வடிவமைத்த ஸ்ரீ கௌரி ஆப்செட் பிரிண்டர்ஸ் உரிமையாளர் அரிமா K.S. சண்முகம் MJF அவர்களுக்கும், கணினி கோர்வையாளர் திருமதி. R. விமலா சீனிவாசன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோ.செ. மங்கை

(கோ.செ. மங்கையர்க்கரசி)
இணை ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை
சேலம் மண்டலம்.

பொருளடக்கம்



அருள்மிகு நரசிம்ம சுவாமி திருக்கோயில்

நாமக்கல்.

இறைவன்	:	அருள்மிகு நரசிம்ம சுவாமி
இறைவி	:	அருள்மிகு நாமகிரித்தாயார்
தீர்த்தம்	:	கமலாலய தீர்த்தம்
தலவிருட்சம்	:	பலாமரம்
ஆகமம்	:	வைகானசம்

புராணச்சிறப்பு

மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்றான நரசிம்ம அவதாரத்தை தரிசிக்க இயலாத மகாலக்ஷ்மி பெருமாளிடத்தில் தங்களுடைய நரசிம்ம அவதாரத்தை தான் தரிசிக்க ஏதேனும் உபாயம் சொல்லவும் என்று கேட்டார், அப்பொழுது எம்பெருமான் ஸ்ரீ சைலம் எனும் சேத்ரத்தில் கமலாலய குளத்தில் அமர்ந்து அஷ்டாக்ஷரமாகிய திரு எட்டெழுத்து மந்திரத்தை உச்சரித்து அதன் பலனாக தன் நரசிம்ம கோலத்தை தரிசிப்பாய் என்றார். அதன்படி மகாலக்ஷ்மி கமல மலர்கள் நிறைந்திருந்த கமல வனத்தினில் "கமலாலயம்" என்னும் குளத்தில், நரசிம்ம மூர்த்தியை நினைத்து கடுந்தவம் புரிகிறாள்.

இக்காலகட்டத்தில் திரேதாயுகத்தில் ராமராவண யுத்தத்தில் மூர்ச்சையான லக்ஷ்மணனின் மூர்ச்சையை

(மயக்கம்) தெளிய வைப்பதற்காக சஞ்சீவி பர்வதத்தை ஆஞ்சநேயர் எடுத்து வந்தார். யுத்தம் முடிந்த பிறகு அதனைக் கொண்டு இருந்த இடத்திலேயே வைத்து விட்டு வரும்வழியில் கண்டகி நதியில் நீராடும் போது அவருக்கு எம்பெருமானின் திருஉருவாகிய (திருமூர்த்தி) சாளக்கிராமம் கிடைக்கப்–பெற்றார். மிகவும் ஆனந்தத்தில் அகமகிழ்ந்து தனக்கு ஆராதிக்க கிடைத்த எம்பெருமானின் சாளக்கிராமத்தை எடுத்துக் கொண்டு வருகின்ற தருவாயில் சூரியோதயத்தின் வருகையை அறிந்து அனுஷ்டானம் செய்ய மகாலக்ஷ்மி தவமியற்றும் கமலாலய குளத்திற்கு வந்து, அன்னை ஸ்ரீமகாலக்ஷ்மியின் திருக்கரங்களில் சாளக்கிராமத்தை வைத்திருக்க கொடுத்து விட்டு அனுஷ்டானம் செய்யச் சென்றார். ஸ்ரீராமஜெயம் ஜபம் முடித்ததும். திரும்ப தாயாரிடம் சாளக்கிராமத்தை கேட்க, தாயாரும் கனம் தாங்காமல் கீழே வைத்துவிட அது மலையாக (பர்வதமாக) மாறிவிட்டது. "நீ பராகிரமசாலி என்பதால் நீயே எடுத்துக்கொள்" என்று தாயார் கூறினார். தாயாரின் வாக்கிற்கிணங்க ஆஞ்சநேய சுவாமி தன் வாலால் மலையை பெயர்க்க முற்படுகையில் ஸ்ரீ நரசிம்ம அவதாரமாய் மஹாலக்ஷ்மிக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயருக்கும் சேவை சாதிக்கிறார். " நீ கொண்டுவந்த சாளக்கிராமத்தினால் இங்கே ஒரு தலம் ஏற்பட்டதால் நீயும் இங்கேயிருந்து என்னை "ஆராதிப்பாயாக" என்று அருளினார்.

தலச்சிறப்பு


கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பல்லவர்களால் குடையப்பட்ட கல்வெட்டுக்கள் உள்ள இரண்டு குடவரை கோயில்கள் இந்நகரில் உள்ளன. இந்த நகரின் நடுநாயகமாகத் திகழும் நாமகிரி என்னும் சாளக்கிராம பர்வத மலையில் கீழ்ப்புறம் அருள்மிகு அரங்கநாதர், கார்க்கோடக சயனத்தில் காட்சியளிக்கிறார். மலையின் மேற்புறம் அருள்மிகு நரசிம்மசுவாமி அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார்.

இங்குள்ள நரசிம்மர் ஸ்ரீ வைகுண்ட நாராயணர், ஹிரண்ய சம்ஹாரமூர்த்தி வாமன அவதாரம் ஸ்ரீவராகமூர்த்தி ஆகிய திருவுருவங்கள் அற்புத சிற்ப வேலைபாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இத்திருத்தலம் மகா விஷ்ணுவின் அம்சமாக ஒரே கல்லால் ஆன நாமமலையாக கோவிந்தன் பக்த பிரகலாதனைக் காக்க இரணியனை வதம் செய்து, அதனால் ஏற்பட்ட வெப்பம் தணிய மகாலட்சுமியாகிய நாமகிரித்தாயாரின் வேண்டுதலுக்கு மனம் இரங்கி, இத்திருத்தலத்தில் எழுந்தருளி தன்னை நாடி வரும் பக்தர்களின் வாழ்வில் இருள் அகற்றி ஒளி ஏற்றுகிறார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறப்பு பெயர் பெற்று விளங்கும் இத்திருத்தலம் சிறந்த பிரார்த்தனைத் தலமாகும். இந்தியாவில் சிறந்து விளங்கும் குடவரைக் கோயில், மும்மூர்த்தி தலம் என்ற சிறப்பினை உடைய இத்திருக்கோயிலில் ஈருயிர் ஓர் உடலாக சங்கரநாராயணனாக, பரந்தாமன் காட்சி தரும் அழகிய திருக்கோலம் சைவ வைணவ பேதம் போக்கும்.

தாயார் பெருமை



"நா" என்ற எழுத்தால் பாபத்தை நசிப்பதும் "ம" என்ற எழுத்தால் மங்களத்தை அருள்வதும் "கி" எனும் எழுத்தால் காரிய சித்தியையும் "ரி"என்றஎழுத்தால் மோக்ஷமாகிய வீடுபேறு எனும்

பிறவாப் பெருநிலை அடைவதையும் அருள்வது "நாமகிரி" என்னும் நாமக்கல் திவ்ய க்ஷேத்ரம். நாமக்கல் நகரில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மூர்த்திகள் அளவிடற்கரிய மிகச் சிறப்பு வாய்ந்தது ஆகும். ஸ்ரீ நாமகிரித் தாயார் பெருமை மிக விசேஷமானது. ஸ்ரீ நாமகிரித்தாயார் தன்னை அண்டிய பக்தர்கள் கருணையுடன் நோக்கி எதிர்நின்று சம்பாஷிப்பது போல் தோற்றமளிக்கும் விஷேச அம்சம் பொருந்திய தெய்வமாகக் கொண்டாடப்படுகிறாள். இந்த ஆலயத்தில் இருக்கும் ஸ்ரீ நரசிம்ம தீர்த்தம் எனும் புஷ்கரணியில் பக்தர்கள் காலை மாலை இரு வேளைகளிலும் ஸ்நானம் செய்து பக்தியுடன் ஸ்ரீ நாமகிரியம்மன், ஸ்ரீ நரசிம்ம, ஸ்ரீ திருவடி சவர்ணதுவஜஸ்தம்பம், ஸ்ரீ ஆஞ்சநேயர் முதலிய கோயில்களை பன்னிருமுறை வலம் வந்து, நியமத்துடன் ஸ்ரீ நாமகிரி தாயாரை சேவை செய்யும் பக்தர்கள் பேய், பிசாசு, பில்லிசூன்யம், ஏவல், தீராத நோய்கள், சந்ததியின்மை முதலிய குறைகள், ஸ்ரீ நாமகிரி தாயார் அருளால் நீங்கப்பெறுகிறார்கள். அவரவர் பக்தி சிரத்தைக்கு தகுந்தபடி ஸ்ரீ நாமகிரி தாயார் அருள்பாலிக்கிறார்.

நரசிம்மர் பெருமை



ஸ்ரீ நரசிம்மர் திருக்கோயில் ஊருக்கு நடுநாயகமாகவிளங்கும் குன்றின்மேல்புரத்தில் அமைந்திருக்கும் குடவரையில் அமைந்துள்ளது. ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி மேற்கு நோக்கி வீராசனமாக வலது திருவடி ஊன்றி, இடது திருவடி மடித்து வீற்றிருக்கிறார். அருகில் பூஜிக முனிவர்களான சனக சனந்தர்களும்,

கவரிவீசும் சூர்ய சந்திரர்களும் அடுத்து வலதுபுறம் ஈஸ்வரரும் இடது புறம் நான்முகனும் (பிரம்மா) பகவான் இரணியனை வதைத்த உக்ரம் தணிவதற்கு வழிபடுகிறார்கள். ஸ்ரீ மகாலக்ஷ்மியின் தவத்தினால் மகிழ்ந்த ஸ்ரீ நரசிம்மர் ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்மர் என்ற பெயருடன் விளங்குகிறார். பிரம்மா, விஷ்ணு, ஈஸ்வரன், மூவரும் ஒரே ஆலயத்தில் பூஜிக்கப்படுவதால் திருமூர்த்தித் தலம் எனும் புகழுடையது. இவ்வூரில் தனிப்பட்ட சிவ ஆலயம் என்று ஏதொன்றும் கிடையாது.

பகவான் ஸ்ரீநரசிம்மமூர்த்தியின் அபயமளிக்கும் வலதுகையில் இரணிய சம்ஹாரம் செய்த ரத்தக்கறையும் நகங்களின் கூர்மையும் காணலாம் என்பர். கர்ப்பக்கிரகம் (கருவறை, அர்த்தமண்டபம் இவை குடவரையில் அமைந்துள்ளது) இத்திருத்தலம் ஆதியில் தேவதச்சனால் உருவாக்கப்பட்டது. என்றும் பிற்காலத்தில் சிற்பக்கலையில் ஆர்வம் கொண்ட பல்லவ அரசர்களால் அழகுறப் புதுப்பிக்கப்பட்டது என்றும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. ஸ்ரீ நரசிம்மரின் பெருமை கூறவொண்ணாதது. இந்த திருக்கோயிலின் கருவறை குடவரையில் பக்கங்களில் ஸ்ரீ வைகுண்ட நாதர், ஹிரண்யசம்ஹார நரசிம்மர் (உக்ரநரசிம்மர்), மறுபுறம் வாமனமூர்த்தி, உலகளந்தப்பெருமாள், வராஹமூர்த்தி முதலிய மூர்த்திகள் வெகு அழகாக சிற்பவடிவில் காட்சி கொடுக்கின்றனர். குடவரை வெகு அழகாகவும் நல்ல வேலைப்பாடுகளும், ஆறுகம்பங்களும், மேலே கொடுங்கை முதலியனவைகளுடன் அமையப் பெற்றிருக்கிறது. இக்குடவரையில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளுக்கு முக்காலங்களிலும் பூஜை நடந்து வருகிறது. இத்திருக்கோயில் தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இந்து சமய அறநிலையத் துறையால் நிர்வாகிக்கப்படுகிறது.



ஆஞ்சநேயர் பெருமை



நாமக்கல் நகரில் நடுநாயகமாக விளங்கும் மலையான சாளக்கிராமத்தை நேபாள தேசத்திலிருந்து எடுத்து வந்து ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி திருஉளப்படி இந்நகரில் ஸ்தாபனம் செய்து "ஸ்ரீ நாமகிரி" நாமக்கல் என்னும் திருப்பெயரை நிலை நாட்டிய பெருமை ஸ்ரீ ஆஞ்சநேயரையே சார்ந்தது. நமது ஐயப்பாடு நீங்கவே விஸ்வரூபத் திருக்கோலத்துடன் நிமிர்ந்து கை கூப்பி நிற்கிறார். மேலே விதானம் இன்றி திறந்த வெளியில் காற்று, மழை, வெயில் இவைகளை லக்ஷியமின்றி தாங்கிக் கொண்டு கம்பீரமாக தரிசனம் கொடுக்கிறார். இன்னமும் வளர்ந்து கொண்டிருப்பதால் மேல் விதானம் கட்டப்படவில்லை. தவிரவும் லோகநாயகனான ஸ்ரீ நரசிம்மரே கிரி உருவில் மேல் விதான மின்றியிருப்பதால் தாசனான தனக்கும் அது தேவையில்லை என்று முன்னோர்கள் விதானம் கட்ட முயற்சித்தபோது ஸ்ரீ ஆஞ்சநேயர் சொப்பனத்தில் அருளியதாக சொல்லப்படுகிறது. இத்தலத்திற்கு வரும் பக்தர்கள் மிகவும் பயபக்தியுடன் ஸ்ரீ ஆஞ்சநேயரிடம் தமது குறைகளை சமர்ப்பித்து தம்மால் செய்ய முடியாத செயல்களையும் ஸ்ரீ ஆஞ்சநேயர் உதவியால் சாதித்துகொண்டு தங்களால் இயன்ற வழிபாடுகளை நிறைவேற்றுகிறார்கள். நவக்கிரகங்களில் குரூரமான சனி, ராகு, இவர்கள் பிரீதிக்காக விஸ்வரூப ஆஞ்சநேயருக்கு நல்லெண்ணையில் செய்த உளுந்துவடைகளால் செய்த மாலைகள் சாற்றியும் விசேஷ திரவியங்களால் அபிஷேகங்கள் செய்வித்தும் புஷ்பங்களாலும் வாசனை சந்தனத்தாலும் அலங்காரம் செய்து மகிழ்ந்தும் தங்கள் பிரார்த்தனைகளை செலுத்துகிறார்கள்.

"ஸ்ரீ ஆஞ்சநேயரை வழிபட்டால் நற்புத்தி, சரீரபலம், கீர்த்தி, அஞ்சாமை, நோயின்மை, தளர்ச்சியின்மை, வாக்குசாதுர்யம் முதலிய நன்மைகள் ஏற்படும்.

அரங்கநாதர் பெருமை

நகரின் கிழக்குப் பகுதியில் நகர் மத்தியில் சுமார் 100 படிக்கட்டுகளை கொண்ட ஸ்ரீ ரங்கநாதர் திருக்கோயில் குடவரையில் அமைந்திருக்கிறது. க்ஷீராப்திநாதர் சிங்கமும் கொண்ட மிக குரூரமான கார்கோடகன் என்ற பாம்பணையில் ஸ்ரீ ரங்கநாதர் என்ற திருநாமத்தோடு யோகநித்திரை புரிகிறார். திருவடிபுறத்தில் தாமஸகுணம் படைத்த அரக்கர்களான மது, கைடபர் இருவரும் தீச்செயல் புரிய வந்தவர்கள் பகவத் குணவிஷேசத்தால் பக்தர்களாக மாறி பகவத் சரணார விந்தங்களில் மலர் வழிபாடு செய்கிறார்கள். உந்தியில் நான்முகனும், சங்கு, சக்கர, கதை, கத்தி, வில் முதலிய முனிபுங்கவர்கள், சூரிய சந்திரர்கள் யாவரும் தும்புரு முதலிய முனிபுங்கவர்களும். சூரிய சந்திரர்கள் யாவரும் பகவானைத் துதிக்கிறார்கள். ஸ்ரீ நரசிம்ம



திருக்கோயிலில் அமைந்திருப்பது போல் இங்கும் சங்கர நாரணயணனுக்கு எதிர்புறத்தில் வாமன திரிவிக்கரம வடிவங்கள் சிற்ப வடிவில் அமைந்திருக்கின்றன. இக்குகையில் முக்கியவிடத்தில் பள்ளி கொண்ட பெருமாளும், பக்கங்களில் சங்கர நாராயணரும் வாமனரும் எழுந்தருளியிருக்கிறார்கள். இந்த க்ஷேத்திரத்தில் கார்கோடகன் தவமியற்றி பகவானை

மகிழ்வித்து அவருக்கு படுக்கையானான். தினமும் கமலாலயத்திலிருந்து தீர்த்தம் கொணர்ந்து ஸ்ரீ ரங்கநாதருக்கு பூஜை செய்கிறான் என்பதற்கு சான்றாக இன்னும் மலைப் பாதையில் குளத்திலிருந்து கோயில்வரை பாம்பு சென்ற வழி காணப்படுகிறது என்பது ஐதீகம்.

ஸ்ரீ மகாலக்ஷ்மி இத்தலத்தில் ஸ்ரீ ரங்கநாயகி என்ற திருப்பெயரால் தனி ஆலயத்தில்அருள் பாலிக்கிறார்.

தனிச்சிறப்பு

நாமக்கல் என்றாலே அனைவரது நினைவிற்கு வருவது அருள்மிகு ஆஞ்சநேயர் திருவுருவமாகும். அத்தகைய சிறப்பு பெற்றவர் ஸ்ரீ ஆஞ்சநேயர். செந்தமிழ்க்கவிஞர் இராமலிங்கம் பிள்ளை பிறந்த ஊர். சிறந்த குடவரைக்கோயில் மும்மூர்த்திகளும் வழிபட்ட புண்ணியத்தலம். வாமன அவதாரச் சிறப்பு, சங்கர நாராயணர் சிறப்பு, அருள் தரும் 18 அடி உயர ஆஞ்சநேயருக்கு வெண்ணெய்க்காப்பு செய்தல் சிறப்பாகும். நாமகிரி தாயார் கணித மேதை இராமானுஜருக்கு கனவில் தோன்றி கணிதத்தை எளிதாக்கிய திருத்தலம். நாமகிரி குன்றில் நரசிம்மமூர்த்தி ஆஞ்சநேயரால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற சிறப்புக்குரியது. ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாற்றி சனி, ராகு, கேது துன்பங்களிலிருந்து விடுபடலாம். வெளிநாட்டினர் அதிகம் வரும் திருத்தலம்.

திருவிழாக்கள்


பங்குனி உத்திர நன்னாளில் ஸ்ரீ நரசிம்மப்பெருமாள் நாமகிரிதாயார் திருக்கல்யாண உற்சவம் நவராத்திரி ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி திருவிழா, தை மாதப்பிறப்பு, தமிழ் வருடப்பிறப்பு, ஆங்கில வருடப்பிறப்பு, நரசிம்ம ஜெயந்தி, ஆஞ்சநேயர் ஜெயந்தி, புரட்டாசி சனிக்கிழமைகள் முக்கியத்திருவிழாவாகும்.

நடைதிறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணிமுதல் – பகல் 12.30 மணி வரை	
மாலை 4.30 மணிமுதல் – இரவு 8.00 மணி வரை	

நித்தியபூஜை

பூஜா காலங்கள்	நடைபெறும் நேரம்
காலசந்தி	காலை 8.30 மணி
உச்சிக்காலம்	மதியம் 12.00 மணி
சாயரட்சை	மாலை 7.30 மணி



தங்கரதம்

இத்திருக்கோயிலில் பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றும் பொருட்டு ரூபாய் 1500 கட்டணம் செலுத்தி தங்கரதம் இழுத்து வழிபட்டு வருகிறார்கள்.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் திருக்கோயில் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 125 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

நாமகிரி என்ற சிறப்புமிக்க நாமக்கல் நகரின் மையத்தில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. நாமக்கல் இரயில்

நிலையத்திலிருந்து 2கி.மீ. தொலைவிலும், பேருந்து நிலையத்திலிருந்து 1கி.மீ. தொலைவிலும் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் தங்கும் விடுதிகள் உள்ளன.

ஆஞ்சநேயர் சுவாமிக்கு செய்யும் அபிஷேக பலன்கள்

நல்லெண்ணெய் : பித்ரு, சனி தோஷம் நிவர்த்தி
பஞ்சாமிர்த அபிஷேகம் : காரியங்கள் நிறை வேறுதல்
சந்தன அபிஷேகம் : தீர்வில்லா பொருளாதாரத்தை அடைதல்
சீகக்காய் அபிஷேகம் : மனோ சக்தி பெறுதல்
பால் அபிஷேகம் : மும்மாரி பெய்தல்
வடைமாலை உளுந்து : ராகு திசை நிவர்த்தி



தொடர்பு முகவரி

உதவி ஆணையர் / செயல் அலுவலர்

அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயில்,

நாமக்கல் நகர் & வட்டம் & நாமக்கல் – **637 001**

தொலைபேசி : **04286 – 233999**

web : www.narasimaswamyanjaneyartemple.org

Email : anjaneyar@tnhrce.org



அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோயில்


திருச்செங்கோடு

இறைவன்	:	அருள்மிகு அர்த்தநாரீசுவரர், அருள்மிகு செங்கோட்டு வேலவர், அருள்மிகு ஆதிகேசவ பெருமாள்
தலவிருட்சம்	:	இலுப்பை மரம்
தீர்த்தம்	:	தேவதீர்த்தம்
ஆகமம்	:	காமீக ஆகமம், வைகானச ஆகமம்

புராணச்சிறப்பு

முன்னொரு காலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் பிணக்குண்டாகி அவர்களுக்குள் எழுந்த போரில் பெயர்த்துக்கொண்டு விண்ணில் பறந்து வந்த மேருவின் சிகரங்களுடன் ஒன்று, மூன்று பாகங்களாகி அவைகளில் ஒரு பாகம் ஆதிசேடனின் சிரத்துடன் விழுந்து திருச்செங்கோடாக அமைந்தது என்பது புராணவரலாறு இதன் காரணமாகவே இத்தலத்திற்கு நாகமலை, சேடமலை, வாயுமலை முதலான சிறப்புப் பெயர்களும் ஏற்பட்டது.

ஆதிசேடன் தன் படங்களால் மேருவின் முடியை அழுத்திக் கொள்ள வேண்டும். வாயுதேவன், சேடனின் பிடியைத் தளர்த்த வேண்டும் என்பதே திட்டம். அதன்படி வல்லவர்கள் இருவரும் மேரு மலைக்குச் சென்று திட்டப்படி செயலில் இறங்கினர். ஆதிசேடன் தன் ஆயிரம் பணமுடியைக் கொண்டு மேருவினை அழுத்திக் கொண்டார். வாயுதேவன் தன் வலிமையெல்லாம் ஒரு முனைப்படுத்தி வீறுகொண்டு தன் வளியோட்டத்தை வீசிச் சாடினான், ஊழிக்காலத்தில் அழிக்கவரும் காற்றிலும் பெருங்காற்றாகிய இதனைத் தாங்கிட இயலாமல் அண்டங்களும் அவற்றிலுள்ள உயிரினங்களும், ஏனைய அனைத்தும் நிலைபெயர்ந்து தட்டுத்தடுமாறி மயங்கி வாட்டமுற்று நின்றன.



இதையறிந்த தேவர்களும் முனிவர்களும் ஓடோடிச் சென்று நாகராசனைப் பார்த்து "ஐயா! உமக்கும் வாயு தேவனுக்கும் இப்போர் விளையாட்டாக இருக்கலாம் ஆனால், இவ்விளையாட்டினால் நேரிடும் பேரழிவுகளைப் பற்றிச் சற்று சிந்தியுங்கள், ஆகையால், உயிர்களின் மீது பரிவுகாட்டி உங்கள் போர் சிறிது அடங்குமாறு கருணை காட்ட வேண்டும்" என்று வேண்டினர். அதற்கு இசைந்த ஆதிசேடன் தன் பிடியைச் சற்று தளர்த்திக் கொடுத்தான். இதுதான் தக்க சமயம் என்பதையறிந்த வாயுதேவன் ஓசையோடு அடித்த வேகத்தினால் மேரு மலையின் சிகரம் ஒன்றும் ஆதிசேடனுடைய சிரங்களில் ஒன்றும் பெயர்த்துக் கொண்டு வானிடை எழுந்து ஒன்றோடொன்று உராய்ந்து கொண்டு தென்திசை நோக்கிப் பறந்தன. மேருவின் சிகரம், ஆதிசேடனின் செந்நீர் படிந்து செந்நிறமாக மாறியது.

அவ்வாறு பறந்து வந்த மேரு சிகரம் மூன்று பாகங்களாகச் சிதறி வீழ்ந்து ஒன்று இலங்கையாக உருவெடுத்தது, இன்னொன்று திருவண்ணாமலையாக உருவெடுத்தது மற்றொரு பாகம் ஆதிசேடனின் சிரத்துடன் வீழ்ந்து திருச்செங்கோடு, நாகமலையாக உருவெடுத்து விளங்குகின்றது.

வரலாறும், சிறப்பும்

திருக்கொடிமாடச்செங்குன்றூர் என்று சிறப்பாக வழங்கப்படும் இத்திருத்தலம், தொன்மைச் சிறப்பும், வரலாற்றுப் பெருமையும் வாய்ந்து கொங்கு நாட்டின் பாடல் பெற்ற ஏழு திருத்தலங்களுள் ஒன்றாக விளங்கி வருகிறது, அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்று உள்ளார், அருணகிரிநாதர் செங்கோட்டு வேலவரைப் பாடியுள்ளார். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று சிறப்புகளையும் கொண்டு பன்னெடுங்காலமாக மக்கள் வேண்டி விரும்பி வழிபட்டு வரும் தெய்வ நலம் விழையும் திருத்தலமாக இக்கோயில் விளங்குகிறது.



சிலப்பதிகாரம் முதலிய பண்டைய தமிழ் நூல்களில் இத்தலம் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளது. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இக்கோயிலில் அருள்மிகு அர்த்தநாரீசுவரர், அருள்மிகு செங்கோட்டுவேலவர், அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் ஆகிய மூவரும் கருநிலை கொண்ட மூர்த்திகளாக எழுந்தருளியுள்ளார். சிவனும் சக்தியும் இரண்டறக் கலந்த நிலையில் மாதொருபாகர் என்று கருநிலை கொண்டு எழுந்தருளியிருப்பது இக்கோயிலின் தனிச் சிறப்பு அம்சமாக உள்ளது.

இக்கோயிலில் சோழ, பாண்டிய மன்னர்கள் கர்நாடக மன்னர்கள், நாயக்க மன்னர்கள், மோரூர் காங்கேயர்கள் மற்றும் இறையன்பர்களால் செய்விக்கப்பட்ட திருப்பணிகள் பற்றிய கல்வெட்டுக்கள் உள்ளன. இவைகள் அரசாங்கத்தால் படி எடுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

பசுவன் கோயில்

மலைக்கோயிலுக்கு படி வழியில் செல்லும் பொழுது நான்கு மண்டபங்களுக்கு பிறகு அடுத்து, மேல்புறத்து பசுவின் (நந்தி) கோயில் தெற்கு நோக்கி இருக்கின்றது. பால் பசுவும், எருமையும், பெருகி பால் பானை பொங்கி, பள்ளி நிறைந்து, நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று நலமுடன் வாழ வேண்டும் என்று இவ்வட்டார மக்கள் குறிப்பாக வேளாண் பெருமக்கள் பசுவன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் நந்தி எம் பெருமானைப் பொங்கலிட்டு வெண்ணெய் சாத்தி வழிபடுவது குறிப்பிடத்தக்கதாகும்.



நாகர்பள்ளம்

பசுவன் கோயிலை விட்டு சற்று கீழே இறங்கினால் பெரியமலைக்கும் (நாகமலை) சிறிய மலைக்கும் (நந்திமலை) இடைப்பட்டமைந்த நாகர்பள்ளம் உள்ளது. வளைந்து நெளிந்து ஐந்து தலைகளையும் விரித்துப் படமெடுத்த நிலையில் லிங்க உருவினைச் சுமந்து கொண்டிருக்கும் ஆதிசேடனின் வியத்தகு திருவுருவம் உள்ளது. இத்திருவுருவம் 60 அடி நீளம் கொண்டதாக உள்ளது. நாகருக்குக் குங்குமம் தூவிப்

பொங்கலிட்டு மக்கள் வழிபடுவர். நாகதோசம் முதலான பல்வகைத் தோசங்களும், நாகர் வழிபாட்டினால் நீங்குகின்றன என்பது நம்பிக்கையாகும்.

சத்தியப்படிகள்

அடுத்து 2 மண்டபங்களுக்குப் பிறகு, அமைந்துள்ளதே அறுபதாம்படி என்னும் அறுபது சத்திய வாக்குப்படிகளாகும். கொடுக்கல் வாங்கல் மற்றும் பிற வழக்குகளில் இரு தரப்பினரும் இப்படிகளில் உரிய வழிபாடு செய்து சத்தியம் செய்து தத்தம் வழக்குகளைத் தீர்த்துக் கொள்கின்றனர். இப்படிகளின் திருவாக்கு முறையை அந்த வேட்கைப் பற்றி.... என்று துவங்கும் திருப்புகழில் அருணகிரிநாதர் பாடியுள்ளார். இப்படிகளின் முடிவில் சுப்பிரமணியர் கோயில் உள்ளது.

செங்கோட்டு வேலவர்

மலைக்கோயிலில் செங்கோட்டுவேலவர் சன்னதி முன்னுள்ள மண்டபத்தின் தூண்களிலும், மேல் விதானத்திலும் அமைந்திருக்கும் சிற்ப வேலைப்பாடுகளின் அழகையும் நுணுக்கத்தையும் கண்டு இன்புறலாம். முன் மண்டபத்தைக் கடந்து நேராக எழுந்தருளியிருக்கும் முருகன் சந்நிதி உள்ளது. வலது கையில் சக்தி வேலும், இடது கையில் சேவலும் தாங்கி, நின்ற கோலத்தில் செங்கோட்டு வேலனாக, செங்கோட்டு வெற்பனாக, செங்கோடனாகக் காட்சியளிக்கிறார். அருணகிரிநாதரால் பாடப் பெற்றவர்.



அர்த்தநாரீசுவரர்

மலைமேல் கருநிலைக் கூடத்தில் அர்த்தநாரீசுவரர் நின்ற திருக்கோலத்தில் பால்வண்ண மேனி தாங்கி விளங்குகிறார். ஒருருவில் இடப்பாகம் பெண்ணாகவும் வலப்பாகம் ஆணாகவும் மங்கைப்பங்கனாய் காட்சியளிக்கின்றார்.

வலது கையால் தண்டாயுதத்தைப் பிடித்தவாறு பராபரையின் பாகமாகிய இடது கை இடையில் படிந்திருக்க, உந்திக்கு மேலுள்ள உடம்பின் பகுதியை சற்று வலப்புறம் சாய்ந்து, மகர குண்டலம் வலது செவியில் அசைய, முத்து மணி இரத்தினத்தோடு இடது செவியில் அணி செய்ய, தாமரையும் நீலோற்பலமும் ஒரே சமயத்தில் மலர்ந்திருப்பது போல ஒன்றுக்கொன்று உற்று நோக்கிய கண்களில் இனிய நோக்கும் பூண்டு, பச்சை நிற கோசீக உடை இடது தொடையையும், புலித்தோலாடை வலது தொடையையும் அலங்கரிக்க முப்புரி நூல் ஒரு பக்க மார்பிலும், சுவர்ணச் சிமிழ் போன்ற நெருங்கிய தனபாரம் மறுப்பக்கமும், இயமனை உதைத்த நாக வீர தண்டையையும் அணிந்த திருவடி ஒரு பாகமும், அழகிய சிலம்பின் பிரபை விளங்கிய திருவடி ஒரு பாகமும் கொண்டு அப்பனும் அம்மையும் ஒரு திருமேனியாகி எழுந்தருளியிருக்கும் பான்மை எண்ணத்திற்கும், எழுத்திற்கும் அகப்படாத ஒரு பெருங்காப்பியமாக அமைகின்றது.

நாகேசுவரர்

மாதொருபாகன் சந்நதிக்கு தென்புறத்தில் நாரிகணபதி கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கிறார். கோயிலின் தென்மேற்குப் பகுதியில் கிழக்கு நோக்கிய நாகேசுவரர் கோயில் உள்ளது. இங்குள்ள லிங்க மூர்த்தி வெண்பாஷணமாக விளங்குகின்றது. இக்கோயிலில், குறிப்பாகக் கருநிலைக் கூடத்தைச் சுற்றியும் அமைக்கப்பட்டுள்ள சிற்ப வேலைப்பாடுகள் நுண்ணியதாயும், பொருட் செறிவுடையதாகவும் சிற்பியின் கைவண்ணத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாய் திகழ்கிறது.

ஆதிகேசவப் பெருமாள்

இக்கோயிலின் தென்புறத்தில் திருமகளும், நிலமகளும் உடனுறைய ஆதிகேசவப் பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் இருந்து அருள் பாலிக்கின்றார்.

கேதார கௌரி விரதம்

புரட்டாசி திங்கள், வளர்பிறை அஷ்டமி திதியில், " கேதார கௌரி விரதத்தை" அன்னையார் துவங்கினார். கருணைக் கடலாகிய எம்பெருமான் பழுதில்லாத் தவம் இயற்றும் பார்வதி தேவியார்க்கு அருள்பாலிக்கத் திருவுள்ளம் கொண்டு புரட்டாசித் திங்கள் தேய்பிறை சதுர்த்தியன்று தேவியர் எதிரே காட்சி கொடுத்து "மலைமகளே! உன் தவத்தை மதித்தேன். வேண்டிய வரத்தைக் கேள்" என்றார். அம்மையார் பேருவகையுடன் இடது பாகம் கொடுத்தருளும்படி இறைவனை வேண்டினார். அவ்வாறு ஒப்பற்ற உண்மைத் தவமியற்றி அருள் வேண்டி நிற்கும் அன்னைக்குத் தம்முடைய இடப்பாகம் கொடுத்தருளினார் சிவபெருமான்.

உயிர்களின்பால் உள்ள அன்பின் திறத்தால், அரிய தவமியற்றி, "இறைவன் ஒன்றானவன்" என்ற உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டியவள் பராசக்தி, அவ்வாறே இத்திருக்கோயிலில் தேவதீர்த்தத்தின் மீது உமையொரு பாகானாய் எழுந்திருந்து அருள்பாலித்து வருவதை விரதம் இருந்து 21 நாட்கள் கொண்டாடப்பட்டு அடுத்த நாள் புரட்டாசி அமாவாசையன்று எழுந்திருந்தும் விழா நடைபெற்று வருகிறது.

பிருங்கி முனிவர்

பிருங்கி என்னும் முனிவருக்கு "பிருங்கியே!, நான்மறைகளும் கூறும் மெய்ப்பொருளை நன்கு அறிந்திருந்தும், நமது சக்தியின் உண்மை நிலை தேராது அழகிழந்து நிற்கின்றனை, சிவமின்றி சக்தியில்லை, சக்தியின்றி சிவமில்லை. சிவனை ஒழிந்த சக்தி அதுவாகச் செயல்பட முடியாது. சக்தி இல்லையேல் சிவத்திற்கு இயக்கமே இல்லை. சிவமும் சக்தியும் உடன்படா நிலையில் இப்பிரபஞ்சம் இயங்காது" என அம்மையப்பன் அருள் புரிந்துள்ளார். தெய்வத்திருமலைத் திருச்செங்கோட்டில் உமையொரு பாகனின், நின்ற திருவடி நிழலில் பிருங்கி முனிவரும் இருந்து வருகிறார்.

மலை உயரம்

அருள்மிகு அர்த்தநாரீசுவரர் மலைக்கோயில், அடிவாரத்திலிருந்து ஏறக்குறைய 650 அடி உயரத்தில் 1200 படிகளைக் கொண்டதாய் அமைந்து உள்ளது. கோயிலின் தென்வடல் நீளம் 201 அடி உள்ளது. கிழமேல் நீளம் 262 அடி உள்ளது. 845 அடி உயரம் உடைய இராசகோபுரம் ஐந்து நிலைகளுடன் அமைந்து விளங்குகின்றது.

திருச்செங்கோட்டில் நடைபெற்ற திருவிளையாடல்கள்

திருச்செங்கோடு வேலவன் மேய்ப்போனாக வந்த வரலாறு
நலிச்சுரம் போக்கி நலமருளிய வரலாறு
கல்லிடபம் கடலைத்தின்ற வரலாறு
தேர்க்கால் இடர்தவிர்த்து ஊமை பேசிய வரலாறு

திருவிழாக்கள்

பிரதோசங்களும், மாதந்தோறும் கார்த்திகை, அமாவாசை நாட்களில் சிறப்புப் பூஜைகளும் நடைபெற்று வருகின்றன. அமாவாசை நாட்களில் பெருமளவில் மக்கள் வழிபாட்டிற்கு வந்து செல்வர். வைகாசி விசாகப் பெருந்திருவிழா தேரோட்டத்துடன் சிறப்பான விழாவாக 14 நாட்கள் நடந்து வருகிறது. இப்பெருவிழாவில் அர்த்தநாரீசுவரர், செங்கோட்டு வேலவர், ஆதிகேசவப் பெருமாள் ஆகிய மும்மூர்த்திகளும் எழுந்தருளுவது வழக்கத்தில் உள்ளது.

நடைதிறந்திருக்கும் நேரம்

காலை 6.00 மணிமுதல் – இரவு 7.30 மணி வரை

நித்தியபூஜை

பூஜா காலங்கள்	நடைபெறும் நேரம்
காலசந்தி	காலை 8.00 மணி
உச்சிக்காலம்	மதியம் 12.00 மணி
சாயரட்சை	மாலை 6.00 மணி

அன்னதானத் திட்டம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதான திட்டத்தின்படி தினந்தோறும் 125 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது.

தங்கரதம்

இத்திருக்கோயிலில் பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றும் பொருட்டு ரூபாய் 1500 கட்டணம் செலுத்தி தங்கரதம் இழுத்து வழிபட்டு வருகிறார்கள்.

அமைவிடம்

இத்திருக்கோயில் நாமக்கல்லில் இருந்து 30கி.மீ. மேற்கிலும், சேலத்திலிருந்து 45 கி.மீ தெற்கிலும் உள்ள திருச்செங்கோட்டில் அமைந்துள்ளது. திருச்செங்கோடு நகரில் இருந்து நாமக்கல் செல்லும் சாலையில் 1 கி.மீ. தொலைவில் மலையின் நுழைவுவாயில் உள்ளது. இந்த மலைச்சாலையில் பக்தர்கள் சென்று வர திருக்கோயில் மூலம் பேருந்துகள் இயக்கப்படுகிறது. மலைக்கோயிலுக்கு இரண்டு சக்கர, வாகனம் கார்கள் மூலமாகவும் மற்றும் படி வழியாகவும் செல்லலாம்.

தொடர்பு முகவரி

உதவி ஆணையர் / செயல் அலுவலர்

அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோயில்

திருச்செங்கோடு நகர் & வட்டம், நாமக்கல் – 637 211

தொலைபேசி எண் : 04288 255925, 9364229181

Website : www.arthanareeswaratemple.tnhrce.in

E-mail : arthanareeswarar@tnhrce.org

சிவாலயங்களில் உள்ள திருமால் சந்நிதி

- திருச்செங்கோடு : ஆதிகேசவப் பெருமாள்
- திருவோத்தூர் : ஆதிகேசவப் பெருமாள்
- கச்சி ஏகம்பம் : நிலாத்துண்டப் பெருமாள்
- சிதம்பரம் : கோவிந்தராஜப் பெருமாள்
- சிக்கல் : கோலவாமனப் பெருமாள்
- அவிநாசி : ஆதிகேசவப் பெருமாள்



அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் உபகோயில்

அருள்மிகு கைலாசநாதர் கோயில்

திருச்செங்கோடு

இறைவன்	: அருள்மிகு கைலாசநாதர்
இறைவி	: அருள்மிகு நறுமண கூந்தலாம்பிகை
தலவிருட்சம்	: வன்னிமரம்
ஆகமம்	: காமீகம்

தலச்சிறப்பு

திருச்செங்கோடு நகரின் நடுவில் தேரோடும் வீதிகள் சூழ்ந்திருக்க உயர்ந்த இராசகோபுர வாயிலுடன் கிழக்கு நோக்கி இக்கோயில் அமைந்துள்ளது. நிலத்தம்பிரான் கோயில் என்றும் இதனை அழைப்பர். இக்கோயில் விக்கிரமத் தேவன் (விக்கிரம பாண்டியன் என்னும் மன்னனால் தோற்றுவிக்கப்பட்டது என்றும், இதனால் விக்கிரம பாண்டீச்சுரர் கோயில் என்றும் அழைக்கப்படுகிறது. இத்திருக்கோயிலில் கைலாசநாதர் இலிங்கத்தின் திருமேனி தாங்கி எழுந்தருளியுள்ளார். இடப்புறம் நறுமண கூந்தலாம்பிகை அம்மன் சன்னதி உள்ளது. இத்திருக்கோயிலில் சனி பகவானுக்கு தனி சன்னதி உள்ளது.

நடைதிறக்கும் நேரம்

காலை **6.00** மணிமுதல் – பகல் **12.00** மணி வரை	
மாலை **4.00** மணிமுதல் – இரவு **8.00** மணி வரை	

நித்தியபூஜை

பூஜா காலங்கள்	நடைபெறும் நேரம்
காலசந்தி	காலை 8.00 மணி
உச்சிகாலம்	மதியம் 12.00 மணி
சாயரட்சை	மாலை 6.00 மணி
அர்த்தஜாமம்	இரவு 8.00 மணி

அன்னதானத் திட்டம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டத்தின்படி தினந்தோறும் 60 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

இத்திருக்கோயில் நாமக்கல்லில் இருந்து 30கி.மீ. மேற்கிலும், சேலத்திலிருந்து 45 கி.மீ தெற்கிலும் உள்ள திருச்செங்கோடு நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. சங்ககிரி இரயில் நிலையத்திலிருந்து 10கி.மீ. தொலைவிலும் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

திருச்செங்கோடு தல பாடல்

வெந்தவெண் ணீறணிந்து விரிநூ றிகழ்மார்பி னல்ல
பந்தன வும்விரலா ளொருமாக மமர்ந்தருளிக்
கொந்தன வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தண னைத்தொழுவா ரவலம் அறுப்பாறே.

– திருஞானசம்பந்தர்

அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெனைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்

– திருஞானசம்பந்தர்



அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயில்

நாமக்கல்

இறைவன்	:	அருள்மிகு சக்தி விநாயகர்

தலச்சிறப்பு

பக்தர்களை காக்கும் கடவுளாக எடுத்த காரியம் இனிதே நிறைவேற அருள்பாலிக்கும் கடவுளாகவும் அருள்மிகு சக்தி விநாயகர் விளங்குகிறார். வடக்கு முகமாக அமைந்து அருள்பாலித்து வருகிறார். சுமார் 100 ஆண்டுகள் தொன்மையும், பழமையும் பெற்ற சிறப்பு திருக்கோயிலாகும்..

நாமக்கல் பகுதி மக்கள் தங்களுடைய எந்தவொரு சுப நிகழ்ச்சியாக இருந்தாலும், விநாயகரை வழிபட்ட பின்னரே செய்கின்றார்கள். வியாபார பெருமக்கள் தங்களது கடை சாவிகளை விநாயகர் திருவடியில் வைத்து, எடுத்து சென்று வியாபாரத்தைத் தொடங்குவார்கள். பக்தர்களின்

வேண்டுதல்களை நிறைவேற்றும் சக்தி மிகுந்த விநாயகராக விளங்குவதால் சக்தி விநாயகர் என்று எல்லோரும் அழைக்கிறார்கள்.

திருவிழாக்கள்

விநாயகர் சதுர்த்தி, கார்த்திகை தீபம், தைப்பூசம், ஆவணி அவிட்டம், தமிழ்ப் புத்தாண்டு.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி காலை 10.00 மணி

காலை 6.30 மணிமுதல் –	பகல் 12.00 மணி வரை
மாலை 5.00 மணிமுதல் –	இரவு 8.00 மணி வரை

அமைவிடம்

இத்திருக்கோயில் நாமக்கல் நகரில் கடைவீதியில் தென்புறமாக தேசிய நெடுஞ்சாலை அருகே அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயில்

கடைவீதி, நாமக்கல் நகர், நாமக்கல் – 637 001

தோப்புக்கரணம்

கரணம் என்றால் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவைகளை தோற்பது " **தோப்புக்கரணம்** "



அருள்மிகு மாரியம்மன், செல்லாண்டியம்மன் திருக்கோயில்

இராசிபுரம்

இறைவன்	:	அருள்மிகு மாரியம்மன்
தலவிருட்சம்	:	வேப்பமரம்

தலச்சிறப்பு

இத்திருத்தலம் இராசிபுரம் நகரில் மேற்கு பகுதியில் பெரிய மதிற்சுவருடன் மிகச்சிறப்பான பொலிவுடன் விளங்குகிற பிரசித்திப்பெற்ற தலமாகும். ஒரு காலத்தில் ஊர் மக்கள் எல்லாம் பிளேக், காலரா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு, எல்லோரும் ஊரை விட்டு வெளியேறிக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது திருவிழாவிற்கான ஏற்பாடு நடைபெற்று, காப்புக்கட்டி, கம்பம் போட்டாயிற்று, பிறகு ஒரு சிலர் கம்பம் போட்ட பிறகு நம்மில் யாரும் ஊரை விட்டு வெளியேறக் கூடாது என்று கூறி அங்கேயேயிருந்தார்கள். அப்பொழுது திருவிழா முடிந்து குளத்தில் கம்பம் விடுவது வழக்கம், அப்படி கம்பம் விட்டுவிட்டு கோயிலுக்கு வருவதற்குள், குளத்தில் விட்ட கம்பமானது கோவில் முன்பாக வந்து இருந்தது. அதைக் கண்ட பெரியவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தபோது சில தாய்மார்களுக்கு அருள் வந்து மாரியம்மன் அது தன் கணவர், இந்த இடத்திலேயேதான் இருக்கவேண்டும் என்று அருள் வாக்கு சொல்லியது. அன்று முதல் நித்திய சுமங்கலியாக

மாரியம்மன் இருக்கவேண்டும் என்றமையால், வருடந்தோறும் பண்டிகை காலங்களில் பழையக் கம்பத்தை எடுத்துவிட்டு புதிய கம்பத்தை கோவில் முன்பு நடுவது வழக்கமாக இருந்து வருகிறது. வருடம் முழுவதும் அம்மனுக்கு கம்பம் உள்ள திருக்கோயிலாகும்.

நடைதிறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணிமுதல் –	பகல் 1.00 மணி வரை
மாலை 4.30 மணிமுதல் –	இரவு 9.00 மணி வரை

நித்தியபூஜை

பூஜா காலங்கள்		நடைபெறும் நேரம்
காலசந்தி	–	காலை 9.00 மணி
அர்த்தசாமம்	–	இரவு 8.30 மணி

திருவிழாக்கள்

ஐப்பசி மாதம் தேர்த்திருவிழா மற்றும் தீமிதித்திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டத்தின்படி தினந்தோறும் 25 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

இத்தலம் சேலத்தில் இருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள இராசிபுரத்தில் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு மாரியம்மன், செல்லாண்டியம்மன் திருக்கோயில்

இராசிபுரம் நகர் மற்றும் வட்டம், நாமக்கல் – 637 408

தொலைபேசி எண் : 04287 – 220411



நித்திய சுமங்கலி மாரியம்மன்

இத்திருக்கோயிலில் இருக்கும் திருக்கம்பமானது வருடம் முழுவதும் நடப்பட்டு இருப்பது சிறப்பு



அருள்மிகு தலைமலை வெங்கடாஜலபதி திருக்கோயில்

(நல்லேந்திர பெருமாள்) செவ்வந்திப்பட்டி

இறைவன்	:	அருள்மிகு தலைமலை நல்லேந்திர பெருமாள்.
இறைவி	:	அலர்மேல் மங்கை தாயார்
தீர்த்தம்	:	கன்னிமார் சுனை தீர்த்தம்
ஆகமம்	:	வைகானசம்

புராணச்சிறப்பு

வரலாற்றுச் சிறப்பும் பெருமையும் மிக்க இத்திருத்தலம் காவிரியின் வடக்கேயும், கொல்லிமலைக்கு தெற்கேயும், தலைமலையின் உச்சியில் ஒரே பாறையில் அருள்மிகு நல்லேந்திர பெருமாள் சிறப்புடன் அமைந்து விளங்குகிறார். ஒரு மனிதன் மல்லாந்து படுத்து இருந்தால் எப்படி இருக்குமோ அப்படியே அமைந்து இருப்பதால் தலைமலை என்று அழைக்கப்படுகிறது. இராமாயணப்போரில் இந்திரஜித் விட்ட பிரம்மாஸ்த்திரத்தால் மயக்கமுற்ற இராமர், இலட்சுமணர் மற்றும் வானரங்கள் மயக்கம் தெளிய ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையை எடுத்து வந்து மூலிகை மணம் பெற்றவுடன் மயக்கம் தெளிந்தனர். பின்னர் இருந்த இடத்தில் எடுத்து சென்று வைப்பதற்கு பதிலாக ஆஞ்சநேயர் தன் வாலால் பலம் கொண்ட மட்டும் வீசியதால் சில பகுதிகள் ஆங்காங்கே சிதறி விழுந்தன

அப்படி விழுந்த சஞ்சீவி மலையின் தலைப் பகுதி சிரகிரி என்கின்ற தலைமலை என்று வரலாறு கூறுகிறது. அப்படியொரு சிறப்பும், பெருமையும், புகழும் தலைமலை அருள்மிகு வெங்கடாஜலபதி



திருக்கோயிலுக்கு உண்டு. எமன் சனியால் பிடிக்கப்பட்டு அல்லல் உற்றான் அப்போது எமன் இந்திரனிடம் வேண்டியபோது சனி தோஷம் நீங்க தலைமலை உறை பெருமாளை வணங்குமாறு பணித்தான். பின்பு வெங்கடேசப் பெருமாளை வணங்கி தோஷம் நீக்கப் பெற்றான் எமதர்மன்.

தலவரலாறு

தலைமலையின் மேற்குப் பகுதியில் நாயக்கரின் பண்ணை இருந்தது. ஒரு நாள் ஒருகாராம் பசு மலையின் உச்சிக்கு மேயச்சென்று விட்டது. மாடு ஓட்டி, மாட்டை எங்கு தேடியும் கிடைக்கவில்லை என்று பண்ணை நாயக்கரிடம் கூறினான். ஆனால், காராம் பசுவை கண்டுபிடித்தே ஆக வேண்டும் என நாயக்கர் கூறிவிட்டார். காராம் பசுவை மலை உச்சிக்கு சென்று தேடி பார்த்த பொழுது ஒரு சிறுவன் பசுவின் மடியில் பால்குடிப்பதை கண்ட அதிசயித்து போனான் மாடு ஓட்டி. இந்நிகழ்ச்சியை பண்ணை நாயக்கரிடம் கூறிய போது மாடு ஓட்டி கண், தெரியாமல் மயக்கமுற்றான். நாயக்கரும் துயரமுற்றார். அன்று நாயக்கர் கனவில் பெருமாள் தோன்றி மாடு ஓட்டி, நிகழ்ச்சியைக் கண்ட உச்சி மலையில் பெருமாள் திருக்கோவில் கட்டும்படியும் அதனை நாயக்கர் பூஜை செய்து வழிபாடு செய்து வரும்படி கூறியதால் திருக்கோவில் கட்டினார்.

தனிச்சிறப்பு

சஞ்சீவி மூலிகை இம்மலையில் உள்ளதால் இங்கு வருபவர்களின் உடல், உள நலன் வளம் பெறுகிறது. இங்குள்ள கன்னிமார் சுனை வற்றுவதில்லை. அதில் நீராடி இங்குள்ள



அனைத்து திருக்கோவில்களிலும் வழிபட்டால் அனைத்து கஷ்டங்களும் நீங்கும் என்பது ஐதீகம்.


குழந்தைப்பேறு இல்லாத மணமக்கள் அருள்மிகு நல்லேந்திர பெருமாளை வேண்டிக்கொண்டால் குழந்தைப்பேறு கிட்டும். இராமர் சீதையை இலங்கையிலிருந்து மீட்டு அயோத்தி செல்லும் வழியில் இத்திருத்தலத்தில் இரவு தங்கி சென்ற போது அவர்கள் தங்கிய இடத்தில் இராமர் சுனை என்ற நீர்சுனை உண்டாக்கப்பட்டது. சுனையில் நீர் வருகிறது. மேலும் இச்சுனையின் அருகில் எப்போதும் மஞ்சள் வாசம் வீசிவருகிறது.

திருக்கோயில் அமைப்பு

தலைமலை அருள்மிகு நல்லேந்திர பெருமாள் திருக்கோவிலுக்கு வலப்புறம் அலர்மேல் மங்கை தாயார் சன்னதி அமைந்துள்ளது. அருள்மிகு கிருஷ்ணன் சன்னதியும், அதற்கு அடுத்தபடியாக அருள்மிகு வரபிரசாதி ஆஞ்சநேயர் சன்னதியும், அதற்கு அடுத்தப்படியாக கன்னிமார் சுனையின் அருகில் அருள்மிகு கருப்பண்ணசாமி சன்னதியும் மற்றும் அருள்மிகு விநாயகர் சன்னதி அமைந்துள்ளன.

திருவிழாக்கள்

சித்திரை மாதம், கிருஷ்ணர் ஜெயந்தி, புரட்டாசி மாதம், நவராத்திரி, விஜயதசமி, மார்கழி மாதம், ஏகாதசி, தை மாதம், பொங்கல், கார்த்திகை தீபம் முக்கியத்திருவிழா ஆகும்.



பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது

காலசந்தி காலை 9.00 மணி
சந்திகாலம் மாலை 3.00 மணி

காலை 9.00 மணிமுதல் – மாலை 7.00 மணி

அமைவிடம்

நாமக்கல்லிலிருந்து சுமார் 19 கி.மீட்டர் தூரத்தில் உள்ள வடவத்தூரிலிருந்து 6 கி.மீட்டர் தூரத்தில் தலைமலை அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

பரம்பரை அறங்காவலர்

அருள்மிகு தலைமலை வெங்கடாஜலபதி திருக்கோயில்

செவ்வந்திப்பட்டி, நாமக்கல் வட்டம், நாமக்கல் – 621 215



திருமாலின் சயனங்கள்

வடபத்ர சயனம்	– திருவில்லிபுத்தூர்	புஜங்க சயனம்	– திருவரங்கம், திருக்கோட்டியூர்
வீரசயனம்	– திருஇந்தளூர்		
தல சயனம்	– திருக்கடல் மல்லை	போக சயனம்	– தில்லை திருச்சித்ரகூடம்
உத்தான சயனம்	– திருக்குடந்தை		
தர்ப்ப சயனம்	– திருப்புல்லாணி	மாணிக்க சயனம்	– திருநீர்மலை



அருள்மிகு அசலதீபேஸ்வரர் திருக்கோயில்

மோகனூர்

இறைவன்	:	அருள்மிகு அசலதீபேஸ்வரர்
இறைவி	:	அருள்மிகு மதுகரவேணி அம்மன்
தலவிருட்சம்	:	வில்வமரம்
ஆகமம்	:	காமீக ஆகமம்

புராணச்சிறப்பு

வேத காலத்தில் கங்காதேவி வில்வ மரங்கள் சூழ்ந்த பகுதியில் சிவபெருமானை பூஜித்து வந்தபோது முருகப்பெருமானுக்கு கங்காதேவி காட்சியளித்தபோது தாயன்பு காராணமாக பால் சுரந்து, வடிந்து காவிரியில் கலந்ததாக புராண வரலாறு கூறுகிறது. புராண காலத்தில் வில்வகிரி க்ஷேத்திரம் என அழைக்கப்பட்ட மோகனூரில், முருகப்பெருமான் பழம் கிடைக்காத காரணத்தால் சிவசக்தியிடம் கோபம் கொண்டு பழநி செல்லும் போது இங்கு தங்கியதாகவும், பார்வதிதேவி முருகனை (மகனை) தேடி வந்து இங்கு கண்டதால் மகனூர் என அழைக்கப்பட்டு பின்னர் மருவி மோகனூர் என அழைக்கப்பட்டது.

தலச்சிறப்பு

அப்பரின் தேவாரப் பாடல் பெற்ற வைப்புத் தலமாகும். கி.பி. 1454ஆம் ஆண்டு அங்கண்ண நாயக்கர் காலத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. கருணையே உருவான அசலதீபேசுவரர் மேற்கு நோக்கி காவிரியைப் பார்த்த நிலையில் அருள்புரிகிறார். அம்பாள் ஸ்ரீ மதுகரவேணி தனி சன்னதியில் எழுந்தருளி அருள்புரிகிறார்.

அசலதீபேஸ்வரர்

அசையாத தீபம் கொண்ட சிவபெருமான் அசலதீபேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். காவிரி நதிக்கரையில் அமைந்துள்ள இத்திருக்கோயிலின் கருவறையிலுள்ள தீபம் புயல் காற்றிலும் கூட எப்போதும் ஆடாமல் அசையாமல் ஒளிர்கிறது. இதுவே அசலதீபேஸ்வரரின் சூட்சம சக்தியாகும்.

தனிச்சிறப்பு

வேதகாலத்தில் ஸ்ரீ பீஜாவாப மகரிஷி அவர்கள் இக்கோயிலில் சிவபெருமானின் அருகிலுள்ள அசையாத தீபத்தை திருவண்ணாமலைக்கு கொண்டு சென்று கார்த்திகை மாதத்தில் பரணி தீபமேற்றி வழிபட்டுள்ளார் என அறியப்படுகிறது. மகரிஷியின் உருவம் இத்திருக்கோயிலின் கல்தூணில் செதுக்கப்பட்டுள்ளது. இதனால் வேதகாலம் முதல் இத்திருத்தலம் அமைக்கப்பெற்றுள்ளதாகக் கருதலாம். வீண்பழி பெற்றவர்களும், மனதில் காரணமில்லா குழப்பம் பெற்றவர்களும், பயம் கொண்டவர்களும் தமது துன்பங்களிலிருந்து விடுபட விசேஷ பரிகாரமாக மௌனவிரதம் கடைபிடித்து அன்னம் சமைத்து அசலதீபேஸ்வரர் சன்னதியில் தானமாக செய்யும் பிரார்த்தனை இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பாகும்.

திருவிழாக்கள்

சிவராத்திரி, மாசி மகம், தமிழ்ப் புத்தாண்டு, தனுர் மாதம்.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி காலை 8.00 மணி

காலை 7.00 மணிமுதல்	– பகல் 1.00 மணி வரை
மாலை 4.30 மணிமுதல்	– இரவு 7.00 மணி வரை

அமைவிடம்

இத்திருத்தலம் நாமக்கல் நகரிலிருந்து 18 கி.மீ. தொலைவிலும், பரமத்தி வேலூரிலிருந்து 13 கி.மீ. தொலைவிலும் உள்ள மோகனூரில் அமைந்துள்ளது. பரமத்திவேலூர் மற்றும் நாமக்கல்லிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு அசலதீபேஸ்வரர் திருக்கோயில்

மோகனூர், நாமக்கல் வட்டம், நாமக்கல் – 637 015



அசலதீபம்

இத்திருக்கோயிலின்
கருவறையில்
உள்ள தீபம் காற்று
அடித்தாலும்
அசையாமல் நின்று
எரியும் என்பதால்
அசலதீபம் என்றும், சுவாமியை
அசலதீபேஸ்வரர் என்றும்
கூறுவர்.



அருள்மிகு பிடாரி செல்லாண்டியம்மன் திருக்கோயில்

ஒருவந்தூர்

இறைவி	:	அருள்மிகு செல்லாண்டியம்மன்
தலவிருட்சம்	:	இலுப்பை மரம்

தலச்சிறப்பு

சுமார் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருத்தலமாகும். பல ஆண்டுகளுக்கு முன்பு உப்புமண் பகுதியாக இருந்த இடத்தில் உப்புமண் வெட்டி எடுக்கும்போது பூமிக்கடியில் இருந்த அம்மன் சிலை ஒன்றின் மீது பட்டு, சிலையின் இடதுதோள் பட்டையில் இருந்து ரத்தம் வழிந்தது. இதைக்கண்ட ஊர் பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து அவ்விடத்தில் பச்சைப் பந்தல் போட்டு பூஜை செய்து வந்தார்கள். தற்போது கோயில் கட்டப்பட்டு உள்ளது.

தனிச்சிறப்பு

பூமித்தாயின் அம்சமாய் தோன்றியவள். அருள்மிகு பிடாரி செல்லாண்டியம்மனை வேண்டினால் பூமியில் விளைபலன்கள் ஒன்றுக்கு பத்தாய் பெருக அருள் புரிவாள்.

திருவிழாக்கள்

மாசி மகம் தேர்த்திருவிழா வெகு விமர்சையாக 15 நாள் கொண்டாடப்படும். ஆடி கடைசி வெள்ளி, பௌர்ணமி, அமாவாசை நாட்களில் சிறப்புப்பூஜை நடைபெறுகிறது.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி காலை 8.00 மணி

சாயரட்சை மாலை 6.00 மணி

காலை 7.00 மணிமுதல்	– பகல் 12.30 மணி வரை
மாலை 4.00 மணிமுதல்	– இரவு 7.00 மணி வரை

அமைவிடம்

இத்திருத்தலம் நாமக்கல் நகரில் இருந்து 23 கி.மீ. தூரத்தில், மோகனூரில் இருந்து காட்டுப்புத்தூர் செல்லும் சாலையில் மேற்புறத்தில் அமையப்பெற்றுள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு பிடாரி செல்லாண்டியம்மன் திருக்கோயில்

ஒருவந்தூர். நாமக்கல் வட்டம், நாமக்கல் – 637 015



அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

நாமகிரிப்பேட்டை, இராசிபுரம்.

இறைவன்	:	அருள்மிகு மாரியம்மன்
தலவிருட்சம்	:	வேப்பமரம்

தலச்சிறப்பு

இத்திருத்தலம் நான்குபுறமும் மலை அரண்களால் சூழப்பட்டு உள்ள இடத்தில் அமையப்பெற்றுள்ளதாகும். எண்திக்குகளிலும் பரிவார தேவதைகள் காவல் புரிய பில்லி சூனிய மாயைகளால் ஏற்பட்ட பிணி நீக்கி காக்கின்றாள். கொல்லிமலையை தலைமையாகக்கொண்டு ஆண்ட வல்வில் ஓரிமன்னன் காலத்தில் அமைக்கப்பெற்றது. இத்திருத்தலத்தில் வல்வில் ஓரி தினமும் தவறாமல் வழிபட்டார் என்பது சிறப்பாகும்.

திருவிழாக்கள்

சித்திரை மாதம் தேர்த்திருவிழா, அக்னிகுண்டம் உருளு தண்டம், சக்தி அழைப்பு வெகு சிறப்பாக நடைபெறும்.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

உச்சிகாலம் மதியம் 12.00 மணி

சாயரட்சை மாலை 6.00 மணி

காலை 6.00 மணிமுதல் –	பகல் 12.30 மணி வரை
மாலை 4.00 மணிமுதல் –	இரவு 7.00 மணி வரை

அமைவிடம்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகரில் இருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள நாமகிரிப்பேட்டையில் உள்ள பிரசித்தி பெற்ற திருத்தலமாகும். இராசிபுரத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

நாமகிரிப்பேட்டை, இராசிபுரம் வட்டம், நாமக்கல் – 637 406

திருவிழா தத்துவம்

இறைவன் நடத்தி வரும் சிருட்டி (உண்டாக்குதல்), ஸ்திதி (காப்பாற்றுதல்) சம்ஹாரம் (அழித்தல்), திரோபவம் (மறைத்தல்) அனுக்கிரகம் (அருளல்) ஆகிய ஐந்தொழில்களும் பத்து நாள் திருவிழாக்களாக கொண்டாடப்படுகிறது

- மண் எடுத்தல், முளையிடுதல், கொடியேற்றம் ஆகியன சிருட்டி (உண்டாக்குதல்) ஆகும்.
- வாகன உத்ஸவங்கள், யாகம், பலியிடுதல் ஆகியன ஸ்திதி (காப்பாற்றுதல்) ஆகும்.
- தேர்த்திருவிழா, பரிவேட்டை, சாந்தணிதல் ஆகியன ஸம்ஹாரம்(அழித்தல்) ஆகும்.
- சத்தமிடாமல் மௌனமாக நடத்தும் திருவிழா திரோபவம் (மறைத்தல்) ஆகும்.
- நடராஜர் உற்சவம், மட்டையடி, திருவூடல் ஆகியன அனுக்கிரகம் (அருளல்) ஆகும்.

பத்து நாள் திருவிழாக்களில் முற்பகுதி விருத்திக்கிரம ஐந்தொழில்கள் நடக்கின்றன எனவும், பிற்பகுதி ஐந்து நாள் இலயக்கிரம ஐந்தொழில்கள் நடக்கின்றன எனவும் கூறுவர்.



அருள்மிகு அறப்பளீஸ்வரர் திருக்கோயில்

கொல்லிமலை.

இறைவன்	:	அருள்மிகு அறப்பளீஸ்வரர்
இறைவி	:	அறம்வளர்த்த நாயகி
தலவிருட்சம்	:	வில்வமரம்
தீர்த்தம்	:	ஆகாய கங்கை

தலவரலாறு

இம்மலையை சங்ககாலப் புலவர்களும் புகழ்ந்து பாடியுள்ளனர். ஏழைகளின் ஊட்டி என்றும், மூலிகைகளின் தாயகமாகவும் கொல்லிமலை திகழ்கிறது. கடையேழு வள்ளல்களில் ஒருவனாகிய வல்வில் ஓரி என்னும் மன்னன் இம்மலையைத் தலைமையிடமாக கொண்டு ஆண்டு வந்தான். உவமையில்லாதவன் என்று திருவள்ளுவன் இறைவனை கூறுவார். இத்திருக்கோயில் இருந்த இடம் விவசாய நிலமாக

இருந்தபோது நிலத்தைக் கலப்பையினால் உழுத போது திடீரென கலப்பை ஒரு பொருளின் மீது மோதிய போது மோதிய இடத்தில் இருந்து குபீரென்று இரத்தம் பீறிட்டு அடிக்கவே அந்த இடத்தைத் தோண்டிப் பார்க்கும் போது அழகிய சுயம்பு சிவலிங்கம் இருக்க கண்டு அதற்கு ஆராதனை ஆரம்பித்ததாகக் கூறுவர், கலப்பையின் நுனி மோதிய இடத்தில் இன்றும் சிவலிங்கத்தின் உச்சியில் காயம்பட்ட தழும்பு காணப்படுகிறது. ஆலயத்தின் அருகிலுள்ள பஞ்சநதி எனும் ஐயாற்றில் உள்ள மீன்களுக்கு பக்தர்கள் உணவுப் பொருட்கள் வழங்கியும் மீனைப்பிடித்து மூக்குக் குத்தியும் மகிழ்கின்றனர். அறியாமையினால் ஒருவர் மீனைப்பிடித்து அறுத்து சமைக்கும்போது கொதிக்கின்ற குழம்பிலிருந்து உயிருடன்



மீன்கள் தாவிக்குதித்து ஓடியதாம். எனவே "அறுத்த மீனைப் பொருத்தி உயிர்ப்பித்த அறப்பளீஸ்வரர்" என்னும் பெயர் வழங்கப்படுகிறது.

கொல்லிப்பாவை

கொல்லிமலையின் புகழுக்கு ஒரு பெரும்சிறந்த காரணமாக அதன் கண் அமையப் பெற்றிருந்த கொல்லிப் பாவை என்பது விளங்கியது. கொல்லிப் பாவையைப்பற்றிய

குறிப்புகள் பல சங்க இலக்கியப்பாடல்களில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. ஒரு சமயம் அசுரர்கள் தேவர்களுடன் பகைத்து எதிர்த்துப் போர் புரிய வந்தனர். அங்ஙனம் அசுரர்கள் வருதலை, எங்ஙனமேனும் தடுத்து நிறுத்தி, அசுரர்களிடமிருந்து தேவர்களைக் காப்பாற்றுவதற்காக தேவர்களும் முனிவர்களும் வேண்டிக் கொண்டபடி, தெய்வத் தச்சன் ஆகிய மயன் என்பவன், கொல்லிமலையின் கண் காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து காமம் உருவித்து மயக்கிக் கொல்லவல்ல ஓர் அழகிய பாவையின் படிமத்தினைச் செய்து வைத்தான். கொல்லி மலையின் கண் இருந்ததனாலும் அசுரர்களையும் அரக்கர்களையும் தனது அழகினால் மயக்கி கொல்வித்து வந்ததனாலும் அப்பாவைப் படிமத்திற்குக் "கொல்லிப் பாவை" எனப் பெயரமைந்தது என்னும் கதை, மக்களிடையில் வழங்கி வருகின்றது.


தலச்சிறப்பு

அறப்பளீஸ்வரர் அருள்மிகு தாயம்மை எனப்படும் அறம்வளர்த்த நாயகியுடன் எழுந்தருளியுள்ளார். இக்கோயில் மூர்த்திச் சிறப்பு, தலச்சிறப்பு, தீர்த்தச் சிறப்பு என்னும் மூவகைச் சிறப்புகளும் பெற்று விளங்குகிறது. இக்கோயிலில் அருள்மிகு அறம்ம்வளர்த்த நாயகி அறப்பளீசுவரர் ஆகிய இருவருடன் விநாயகரும், ஆறுமுக பெருமானும் சந்நிதிகொண்டு விளங்குகின்றனர் . கோயிலின் ஒரே இடத்தில் நின்று, ஒரே சமயத்தில், இந்த நான்கு தெய்வத் திருவுருவங்களையும் ஒருசேரத் தரிசித்து மகிழும் அரிய வாய்ப்பு, இத்தலத்தின் தனிப்பெரும் சிறப்பாகும்.

"கொல்லிக் குளிர் அறைப்பள்ளி" என்றும், கள்ளார் கமழ் கொல்லி அறைப்பள்ளி என்றும் திருநாவுக்கரசர் பெருமான் இத்தலத்தைத் தம்முடைய பாடல்களில் குறித்துள்ளார். திருஞானசம்பந்தரும், திருத்தலக் கோவைப் பதிகத்தில் "அறைப்பள்ளி" என்று குறிப்பிட்டுப் போற்றியுள்ளார்.

திருக்கோயில் அமைப்பு

சுற்றுபிராகரத்தில் வள்ளி, தேவசேனா உடனுடன் ஆறுமுகபெருமானும், விநாயகர், காசிவிஸ்வநாதர், விசாலாட்சி,



அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்

கோட்டைமேடு, குமாரபாளையம்

இறைவன்	:	அருள்மிகு கைலாசநாதர்
இறைவி	:	அருள்மிகு அன்னபூரணி
தலவிருட்சம்	:	வன்னிமரம்
தீர்த்தம்	:	காசி தீர்த்தம்

தலச்சிறப்பு

இத்திருக்கோயில் சுமார் 700 வருடங்களுக்கு முற்பட்டது. மூன்று நிலைகளைக் கொண்ட இராஜ கோபுரம் கண்டோர் கண்ணைக்கவரும் வகையில் அமைந்துள்ளது. மனமாற துதித்தால் மனஅமைதி தரும் சிறந்த திருத்தலம்.

தேவையற்ற மனக்கவலை, பயம் ஆகியவற்றை நீக்கும் தலம். மன அமைதி கிடைக்கும். கிரகங்களினால் ஏற்படும் தோஷம் இத்திருத்தலம் வந்து வணங்கினால் நீங்கும் என்பது ஐதீகம்.

திருவிழாக்கள்

சிவராத்திரி, தனுர் மாத பூஜைகள், தமிழ் மாதப் பிறப்புகள், நவராத்திரி திருவிழா மற்றும் தைப்பொங்கல்



பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி காலை 8.00 மணி

உச்சிகாலம் மதியம் 12.00 மணி

காலை 7.00 மணிமுதல் – பகல் 12.00 மணி வரை

மாலை 5.00 மணிமுதல் – இரவு 8.00 மணி வரை



அமைவிடம்

ஈரோடு நகரிலிருந்து 16 கி.மீ. தூரத்திலும்,சங்ககிரி நகரிலிருந்து 22 கி.மீ. தொலைவிலும் பவானியிலிருந்து 2கி.மீ தொலைவிலும் உள்ள குமாரபாளையத்திலிருந்து திருச்செங்கோடு செல்லும் சாலையில் 1கி.மீ தொலைவில் திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்

கோட்டை மேடு, குமாரபாளையம், திருச்செங்கோடு வட்டம்,

நாமக்கல் – 638 183

திருக்கோயில் அமைப்பும் மனித வடிவமும்

கோபுரம்	பாதங்கள்
ஆஸ்தான மண்டபம்.	முழங்கால்
நிருத்த மண்டபம்.	தொடை
பலிபீடம்.	தொப்புள்
மகாமண்டபம்.	மார்பு
அர்த்த மண்டபம்.	கழுத்து
கர்ப்பக்கிரகம்.	சிரம்
தட்சிணாமூர்த்தி	வலது செவி
சண்டிகேசுவரர்.	இடது செவி
நடராஜர்	மார்பில்
ஸ்நபன மண்டபவாசல்.	வாய்
ஸ்நபன மண்டபம்.	மூக்கு
இலிங்கம்.	புருவமத்தி
விமானம்	தலை உச்சி



அருள்மிகு திருவேலீஸ்வரர் திருக்கோயில்

நன்செய்இடையார், பரமத்தி வேலூர்

இறைவன்	:	அருள்மிகு திருவேலிநாதர்
இறைவி	:	அருள்மிகு சுந்தரவல்லி அம்பாள்
தலவிருட்சம்	:	வன்னி மரம்

புராணச்சிறப்பு

பஞ்ச பாண்டவர்களில் பலசாலியான பீமன், தான் மிகவும் பலசாலி, தன்னை விட யாரும் பலசாலி இந்த உலகத்தில் இல்லை என எண்ணியிருந்த பீமனின் எண்ணத்தை சிவபெருமான் புருஷாமிருகத்தைக்கொண்டு தவிடு பொடியாக்கினார். பீமன் தன் தவறை உணர்ந்து சிவபெருமானை திருமணிமுத்தாற்றங் கரையோரத்தில் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்தார்.

தலச்சிறப்பு

இக்கோயில் சோழர்களால் கி.பி.10ம் நூற்றாண்டில் முதலாம் இராஜராஜசோழனும் அவரது மகன் ராஜேந்திர சோழனும் கட்டியதாக கல்வெட்டு காணப்படுகிறது. இறைவர்

திருவேலிநாதர் சுயம்புலிங்கம், சண்டிகேஸ்வரர், நந்திதேவர், பைரவர், சனீஸ்வரர், விநாயகர், முருகர் வள்ளி தெய்வானை, நால்வர் மற்றும் நவக்கிரக சன்னதிகள் உள்ளன.

தனிச்சிறப்பு

திருமணத்தடை நீங்கி விரைவில் திருமணம் நடைபெறுதல், குழந்தைப்பேறு அருளல், கல்வியில் சிறப்பு பெற இத்தலம் சிறப்பு, சனீஸ்வரனுக்கு தனி சன்னதியும், சீனிவாசப் பெருமாளுக்கு தனி ஆலயமும் உள்ளது இத்தலச்சிறப்பு.

திருவிழா

பிரதோஷம், மகாசிவராத்திரி, மார்கழி திருவாதிரை

பூஜை. நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி	காலை 7.30 மணி
சாயரட்சை	மாலை 6.00 மணி

காலை 6.00 மணிமுதல்	–	பகல் 11.00 மணி வரை
மாலை 4.00 மணிமுதல்	–	இரவு 8.00 மணி வரை

அமைவிடம்

பரமத்தி வேலூரிலிருந்து கிழக்கே 3கி.மீ. தொலைவில் உள்ள நஞ்செய் இடையாரில் உள்ள திருமணிமுத்தாற்றங் கரையோரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. நாமகல்லி–லிருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி


பரம்பரை அறங்கவலர்

அருள்மிகு திருவேலீஸ்வரர் திருக்கோயில்

நஞ்செய் இடையார், பரமத்தி வட்டம், நாமக்கல் – 638 182

பூஜை மணி

பூஜை மணிக்கு அதிதேவதை வாசுதேவன், நாக்கிற்கு சரஸ்வதி, தாடனத்திற்கு அக்னி, தண்டிற்கு சூரியன், நாதத்திற்கு ஈஸ்வரன் அதி தேவதைகளாகும்.



அருள்மிகு கரிய காளியம்மன் திருக்கோயில்

பெரியமணலி.

இறைவி : அருள்மிகு கரிய காளியம்மன்

தலச்சிறப்பு

உலகைக் காக்கும் அன்னை பராசக்தி அருள்மிகு கரிய காளியம்மனாக எழுந்தருளி பக்தர்களைக் காத்து அருள் புரிகிறாள். இங்கு வேண்டுதல்கள் நிறைவேறும். காளியம்மன் அருளினால் வாழ்க்கையில், பில்லி, சூனியம், பகை நீக்கப்படுகிறது. காலத்தை நிர்ணயிக்கும் அன்னை கரிய காளியம்மன் குறித்த காலத்தில் தனது பக்தர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலும், திருமணத் தடை நீங்கி திருமணம் விரைவில் நிறைவேறவும் அருள்புரிகிறாள் என்பது இத்தலத்தினுடைய பெருமையாகும். சிறந்த பிரார்த்தனைத்தலம். அமாவாசை மற்றும் பௌர்ணமி காலங்களில் இங்கு பூஜை செய்வது சிறப்பு.

திருவிழாக்கள்

மாசி, பங்குனி மாதங்களில் திருவிழா சிறப்பானவை, ஆடி 18 திருவிழா, ஆடி அமாவாசை பௌர்ணமி தினங்களும் சிறப்பானவை.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒருகால பூஜை மட்டும் நடைபெறுகிறது.

உச்சிகாலம் 12.00 மணி

காலை 7.30 மணிமுதல்	–	பகல் 12.30 மணி வரை
மாலை 5.00 மணிமுதல்	–	இரவு 7.00 மணி வரை

அமைவிடம்

இத்திருக்கோயில் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டிலிருந்து 25 கி.மீ. தொலைவிலும், நாமக்கல்லிலிருந்து 20 கி.மீ. தொலைவிலும், வேலக்கவுண்டம்பட்டி – வையப்பமலை சாலையில் 6 கி.மீ. தொலைவில் உள்ள பெரியமணலி என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. மேற்படி ஊர்களிலிருந்து பேருந்து வசதியுள்ளது.



தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு கரிய காளியம்மன் திருக்கோயில்

பெரியமணலி, திருச்செங்கோடு வட்டம்,

நாமக்கல்– 637406



அருள்மிகு சுப்ரமணிய சுவாமி, பிரம்ம லிங்கேஸ்வரர் திருக்கோயில்

மாவுரெட்டிப்பட்டி.

இறைவன்	:	அருள்மிகு சுப்ரமணியசுவாமி
தலவிருட்சம்	:	பூவரசு மரம்

தலச்சிறப்பு

விளைச்சல் பெருகவும், கால்நடைகள் நோய் நொடிகள் இல்லாமல் இருக்கவும், மழை வளம் வேண்டியும் வழிபாடு செய்வது. இத்திருத்தலத்தில் கலைச்சிற்பங்கள் மிகவும் நேர்த்தியாகவும், அழகுபெற்றும் அமைந்திருக்கிறது. இக்கோயில் குன்றின்மேல் அமைந்துள்ளது.

திருவிழாக்கள்


பங்குனி திருவிழா, கிருத்திகை, அமாவாசை, கந்தசஷ்டி, தை வெள்ளி மற்றும் பங்குனி உத்திரம்.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி காலை 9.00 மணி

காலை 7.30 மணிமுதல்	–	பகல் 12.30 மணி வரை
மாலை 4.00 மணிமுதல்	–	இரவு 7.00 மணி வரை



அமைவிடம்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் (மாவுரெட்டிப்பட்டி) கிராமத்தில் நாமக்கல்லில் இருந்து 40 கி.மீ. தூரத்திலும் ஈரோடு நகரிலிருந்து 35 கி.மீ. தொலைவிலும், இத்திருத்தலம் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு சுப்ரமணிய சுவாமி

பிரம்ம லிங்கேஸ்வரர் திருக்கோயில்

மாவுரெட்டிப்பட்டி, திருச்செங்கோடு, நாமக்கல்–637 212


ஸ்ரீ கல்யாண பிரசன்ன வெங்கட்டரமண சுவாமி
மோகனூர்.



அருள்மிகு பாண்டுரங்கன் திருக்கோயில்

குமாரபாளையம்.

இறைவன்	:	அருள்மிகு பாண்டுரங்கன்
இறைவி	:	அருள்மிகு விட்டோபா தாயார்
ஆகமம்	:	பாஞ்சராத்திரம்

தலச்சிறப்பு

காட்டூரில் வசித்துவந்த பக்தர்கள் சிலர் ஸ்ரீ பாண்டுரங்கர் பெருமானின் திருவுருவப் படத்தை பனைமரத்தில் ஆணியில் பொருத்தி ஆடி, பாடி, பஜனை செய்து வந்தனர். பிறகு பண்டரிபுரத்தில் உள்ளதுபோலவே அருள்மிகு பாண்டுரங்கர், அருள்மிகு விட்டோபா, அருள்மிகு மகாலட்சுமி,

அருள்மிகு ஆஞ்சநேயர், அருள்மிகு ஆண்டாள் ஆகிய மூர்த்திகளை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகிறார்கள்.

தனிச்சிறப்பு

இத்திருக்கோயிலின் மூலமூர்த்தியான அருள்மிகு பாண்டுரங்கரை பக்தர்களே தொட்டு தரிசனம் செய்வது தனிச்சிறப்புடையது. மற்ற ஆலயங்களில் இதுபோன்ற தரிசனத்திற்கு வழிமுறையில்லை.

திருவிழாக்கள்

பந்தசேவை, ஆசாட சயனஏகாதசி, வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் திறப்பு மற்றும் புரட்டாசி சனிக்கிழமைகள். திருவிழா நாட்களில் பஜனை செய்து வழிபடுவது சிறப்பாகும்.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி காலை 8.00 மணி
சாயரட்சை இரவு 7.00 மணி

காலை 6.00 மணிமுதல்	– பகல் 10.00 மணி வரை
மாலை 5.00 மணிமுதல்	– இரவு 8.00 மணி வரை

அமைவிடம்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் குமாரபாளையம் கிராமத்தில் இருக்கும் இத்திருக்கோயில் ஈரோடு நகரிலிருந்து சுமார் 16 கி.மீ. தூரத்திலும், சேலம் நகரிலிருந்து சுமார் 54 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு பாண்டுரங்கன் திருக்கோயில்
குமாரபாளையம்,
திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் – 638 183



அருள்மிகு இளையபெருமாள் (எ) வெங்கட்டரமண சுவாமி திருக்கோயில்

கோரக்குட்டை

இறைவன்	:	அருள்மிகு இளையபெருமாள் (எ) வெங்கட்டரமண சுவாமி
இறைவி	:	ஸ்ரீ தேவி பூதேவி

தலச்சிறப்பு

இக்கோயிலின் இறைவன் அருள்மிகு இளையபெருமாள் மலைமீது கிழக்குநோக்கி அமர்ந்து அருள்பாலிக்கிறார். மலையின் பாத அடிவாரத்தில் விநாயகர் மற்றும் ஆஞ்சநேயர் சன்னதி உள்ளது. மலைக்கு **856** படிக்கட்டுகளைக் கடந்து பெருமாளை தரிசிக்க செல்லவேண்டும். இத்திருக் கோயிலுக்குச் சென்று வழிபட்டால் அனைத்து சிறப்புகளும் பெறலாம். இத்திருக்கோயிலில் திருமணம் செய்ய விரும்புவோர் முதலில் பெருமாளிடம் வாக்கு கேட்டு அதன்படி திருமணம் செய்து வருகிறார்கள் என்பது சிறப்பு.

பிறதெய்வங்கள்

ஸ்ரீ விநாயகர், ஆஞ்சநேயர் சன்னதி, கருடாழ்வார் சன்னதி அமைந்துள்ளன.

திருவிழாக்கள்

இத்திருக்கோயிலில் சித்திரை தேர்த்திருவிழா நடைபெறுகிறது. பெருமாள் தேர், ஆஞ்சநேயர் தேர் இவ்விரண்டு தேர்களும் திருக்கோயில் மலையைச் சுற்றி வருவது சிறப்பான வைபவம் ஆகும். புரட்டாசி மாதம் 5 சனிக்கிழமைகளிலும் சிறப்பான விழாக்கள் நடைபெற்று வருகின்றன.

பூஜை. நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

உச்சிகாலம் மதியம் 12.00 மணி

சாயரட்சை மாலை 5.00 மணி

காலை 6.00 மணிமுதல் – மாலை 6.00 மணிவரை

அமைவிடம்

இத்திருக்கோயில் நாமக்கல்லிலிருந்து மேற்கில் சுமார் 50கி.மீ தொலைவிலும், திருச்செங்கோட்டிலிருந்து மேற்கில் சுமார் 15கி.மீ தொலைவிலும், கோரக்குட்டை கிராமத்தில் ஒரே கல்லால் ஆன மலைமீது சுவாமி தெற்கு முகம் நோக்கி அமைந்துள்ள சன்னதியாகும்.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு இளையபெருமாள் வெங்கட்டரமண சுவாமி திருக்கோயில்


கோரக்குட்டை, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் – 637 209.

திருக்கோயில்களில் கடைப்பிடிக்க வேண்டியவை

- திருக்கோயில்களுக்குச் செல்லும் முன் நீராடி, அவரவர் சமய சின்னங்களை அணிந்து பக்தியுடன் செல்லவேண்டும்.
- கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதால் கோபுரத்தை கண்டவுடன் இரு கைகளையும் கூப்பி வணங்கவேண்டும்.
- இறைவன் திருநாமத்தை உச்சரித்தவாறே செல்லவேண்டும்.
- முதலில் தல விநாயகரைத் தரிசிக்கவேண்டும்.
- பலி பீடத்தின் முன்பு தீய சிந்தனைகளை விட்டு, நல் சிந்தனைகளுடன் தரிசனத்திற்குச் செல்லவேண்டும்.
- தரிசனம் முடிந்து திரும்பும் போது சிறிது நேரம் அமர்ந்து செல்ல வேண்டும்.

திருக்கோயில்களில் தவிர்க்க வேண்டியவை

- சமய சின்னங்களை அணியாமல் ஆலயத்திற்குள் செல்லுதல்.
- கோவிலில் உள்ள தெய்வங்களுக்கு முன்னால் நாம் நமது பின்புறம் காட்டி உட்காருதல்.
- தீப ஆராதனை நடக்கும் போது குறுக்கும், நெடுக்குமாக செல்லுதல்.
- சந்நிதிக்கு நேராக நின்று கொண்டு மற்றவர்கள் தரிசனம் செய்ய இடையூறு செய்தல்.
- பிரகாரம் சுற்றி வரும்போது அரசியல் / வீட்டுக் கதைகளை மற்றவர்களிடம் பேசிக் கொண்டு செல்லுதல்.
- பிரசாதத்தை சாப்பிட்டுவிட்டு கோவிலில் உள்ள கலை வேலைப்பாடுகள் மிகுந்த தூண்களில் கைகளைத் துடைத்தல்.
- கோயிலை அசுத்தம் செய்தல்.
- லுங்கி அணிந்து செல்லுதல்.
மேற்கண்டவைகளை திருக்கோயிலில் தவிர்க்க வேண்டும்.



அருள்மிகு கந்தசாமி திருக்கோயில்

காளிப்பட்டி.

இறைவன்	:	அருள்மிகு கந்தசாமி
தலவிருட்சம்	:	வன்னிமரம்

தலவரலாறு

பழநிக்குச் சென்று பழநி முருகனை தரிசிப்பது பக்தர்களின் வாழ்வில் பொற்காலம் ஆகும். ஆனால் அந்த பழநியில் குடிகொண்ட கந்தனே நேரில் காளிப்பட்டிக்கு வந்து தங்கியிருக்கும் அதிசயமும் உண்டு. பூசாரி ஒருவர் தனது சிறு குடிசையில் காவடியை வைத்து தினமும் பூஜித்து வந்தார். வருடந்தோறும் தைப்பூசத் தினத்தில் பழநிக்கு பாதயாத்திரையாக காவடியைச் சுமந்து சென்று சரவணப் பொய்கையில் நீராடி பெருமானை வணங்கிவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு சமயம் அவர் பழநி



முருகனை வணங்கிவிட்டு நடந்த களைப்புத் தீர ஓய்வாகப் படுத்து உறங்கிய போது கந்தன் அவர் கனவில் தோன்றி அன்பனே உன் பக்தியை மெச்சினேன். இனிமேல் நீ சிரமத்துடன் இங்கு நடந்து வர வேண்டாம். நானே நீ இருக்கும் இடத்திற்கு (காளிப்பட்டி) வந்து விடுகிறேன் என்று அருள்வாக்கு கூறி மறைந்தார். மூலவர் தண்டாயுதபாணியாக மேற்கு பார்த்து காட்சி தருகிறார்.

வழிவிடு கணபதி, இடும்பன், இரட்டை பிள்ளையார் சன்னதி சனீஸ்வரர், நவகிரகங்கள் மற்றும் வன்னிமரத்து பிள்ளையார் சன்னதிகளும் உள்ளது.

தலச்சிறப்பு

கந்தசாமி அருள் வாக்கால் வரட்டு பசுவுக்கு பால் சுரந்த அதிசயமும், பாம்பால் தீண்டப்பட்டவருக்கு விஷமுறிவு ஏற்பட்ட அதிசயமும் இன்றும் நிகழ்ந்து வருகிறது. பக்தர்களின் திருமணம், குழந்தை செல்வம் வழங்கி வருகிறார். திருக்கோயிலில் இடும்பன் சன்னதியும் சிறப்பு வாய்ந்தது. இச்சன்னதியில் பக்தர்கள் பில்லி, சூனியம், மனநலம்



குன்றியோர்க்கு தன் கரு மருந்தால் நிவர்த்தி செய்து வருகிறார். இத்திருக்கோயிலில் திருநீறானது சக்தி வாய்ந்த கரு மருந்தாக வழங்கப்படுகிறது.

திருவிழாக்கள்

காளிப்பட்டி அருள்மிகு கந்தசாமி திருக்கோவிலில் வருடந்தோறும் தை மாத பூச நட்சத்திரத்தில் தைப்பூசத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். தேர் உற்சவத்துடனும் சிறப்பான மாட்டுத் தாவணியுடனும் எட்டு நாட்கள் பெருந்திருவிழா நடைபெறுகிறது. இவை நீங்கலாக ஐப்பசியில் சூரசம்ஹாரத் திருவிழா (கந்தசஷ்டி), பங்குனி உத்திரத்திருவிழா நடைபெறுகிறது.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி	காலை 8.00 மணி
சாயரட்சை	மாலை 6.00 மணி

காலை 6.00 மணிமுதல் – இரவு 7.30 மணி வரை

அன்னதானத்திட்டம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டத்தின்படி தினந்தோறும் 30 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

இத்திருக்கோயில் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு – சேலம் வழி தடத்தில் காளிப்பட்டி என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. சேலத்திலிருந்து சுமார் 23 கி.மீ. தொலைவிலும், நாமக்கல்லில் இருந்து 45 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு கந்தசாமி திருக்கோயில்

காளிப்பட்டி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் – 637 501

வணக்க முறைகள்

- சிவனையோ விஷ்ணுவையோ வணங்கும்போது தலைக்குமேல் 12 அங்குலம் கைகூப்ப வேண்டும்.
- பிற தேவர்களுக்கு தலைமேல் கைகூப்ப வேண்டும்.
- குருவை நெற்றிக்கு நேர் கைகூப்பி வணங்க வேண்டும்.
- தந்தைக்கும், அரசர்க்கும் வாய்க்கு நேர் கைகூப்பி வணங்கவேண்டும்.
- அறநெறியாளர்களுக்கு மார்புக்கு நேர் கைகூப்பி வணங்கவேண்டும்.
- அன்னையை வயிற்றுக்குநேர் கைகூப்பி வணங்க வேண்டும்.



அருள்மிகு காளியம்மன் திருக்கோயில்

குமாரபாளையம்

இறைவி	:	அருள்மிகு காளியம்மன்
ஆகமம்	:	சிவஆகமம்

தலவரலாறு

முற்காலத்தில் கத்தாளை, மணல் மேடாக இந்த பகுதி திகழ்ந்தது. தினந்தோறும் மாலை வேளைகளில் இந்த பகுதிகளில் சிறுவர், சிறுமிகள் விளையாடிக் கொண்டிருப்பது வழக்கம். தங்களுடன் ஒரு சிறு பெண் குழந்தை பட்டுப் பாவாடை அணிந்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்ட சிறுமியர்கள் தங்களது பெற்றோர்களிடம் தனக்கும் பட்டுப் பாவாடை வேண்டுமென கேட்டுள்ளனர். பெற்றோர்களுக்கு சந்தேகம் எழுந்தது. ஏனெனில் அக்காலத்தில் பட்டு பாவாடை அணியும் அளவிற்கு வசதி வாய்ப்பில்லை. அடுத்த நாள் பெற்றோர்கள் குழந்தைகள் விளையாடுவதை கவனித்த தொடங்கினார்கள். பட்டுப்பாவாடை அணிந்த குழந்தை பெற்றோர்கள் கண்களுக்குத் தென்படவில்லை. ஒரு சில தினங்களில் ஒரு பெண் குழந்தைக்கு அருள் வந்து நான் காளியம்மன் வெளியூரிலிருந்து வந்து உள்ளேன், எனக்கு இந்த இடம் வாசஸ்தலம் செய்வதற்கு ஏதுவாக உள்ளது. இங்கு ஒரு கோயில் எழுப்புங்கள் நான் காவிரி ஆற்றில் சுயம்பு வடிவாக

உள்ளேன். ஆற்றிலிருந்து எடுத்து வந்து பிரதிஷ்டை செய்யுங்கள் என்று கூறியது. அதன் படி பெரியோர்கள் பிரதிஷ்டை செய்துள்ளதாக தெரியவருகிறது. இங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தி தெற்கு முகமாக அமைந்துள்ளது சிறப்பாகும்.

பிறசன்னதிகள்

துவார கணபதி, பாலமுருகன், கல்யாண விநாயகர், ஐய்யனார், முனீஸ்வரர், நவகிரகங்கள் சன்னதிகள் உள்ளிட்ட சன்னதிகள் உள்ளன

திருவிழா

மாசி மாதத்தில் நடைபெறும் குண்டம் மற்றும் தேர்த் திருவிழா, வாணவேடிக்கை வெகு விமர்சையாக நடைபெறுகிறது.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி	காலை 9.00 மணி
உச்சிக்காலம்	மதியம் 12.00 மணி

காலை 6.30 மணிமுதல்	– பகல் 12.30 மணி வரை
மாலை 4.00 மணிமுதல்	– இரவு 8.00 மணி வரை

அன்னதானத்திட்டம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டத்தின்படி தினந்தோறும் 25 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

நாமக்கல் நகரிலிருந்து 50கி.மீ. தொலைவிலும், ஈரோட்டிலிருந்து 16 கி.மீ. தொலைவிலும் சங்ககிரியிலிருந்து 22கி.மீ. தொலைவிலும், பவானியிலிருந்து 2கி.மீ. தொலைவிலும் உள்ள குமாரபாளையத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு காளியம்மன் திருக்கோயில்

குமாரபாளையம், திருசெங்கோடு வட்டம், நாமக்கல் – 638 183



அருள்மிகு எட்டுக்கை அம்மன் திருக்கோயில்

கீரம்பூர்.

இறைவி	:	அருள்மிகு எட்டுக்கை அம்மன்

தலச்சிறப்பு

இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பிகைக்கு எட்டு திருக்கரங்கள். சூலத்தால் மகிஷாசூரனை வதம் செய்யும் வண்ணம் மகிஷாசூரமர்த்தினியாக தீமைகளை வேர் அறுத்து நன்மைகளை குவிக்கும் தேவியாக காட்சித்தருகிறார்.

தீமையை அழிக்கும் தேவியின் இந்த அவதாரம் மிகவும் அபூர்வமானது. இத்திருக்கோயில் எட்டுக்கரத்து அம்மனை வழிபட்டால் நமது துன்பங்கள், சூரிய ஒளிபட்ட பனித்துளி போல் மறைகிறது. உள்ளம் தாமரைமலர் போல் குளிர்ச்சிஅடைகிறது. கருவறையில் அணையாத நந்தா விளக்கு உள்ளது. இங்கு அம்மனுக்கு பலி கொடுத்தல் கூடாது.

திருவிழாக்கள்

சித்திரை மாதத் தேர்த்திருவிழா.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி	காலை 9.00 மணி
உச்சிகாலம்	மதியம் 12.00 மணி
சாயரட்சை	மாலை 6.00 மணி

காலை 6.00 மணிமுதல் – இரவு 8.30 மணி வரை

அமைவிடம்

இத்திருக்கோயில் நாமக்கல் நகரிலிருந்து கரூர் செல்லும் சாலையில் 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நாமக்கல்லிலிருந்து பேருந்து வசதியுள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு எட்டுக்கை அம்மன் திருக்கோயில்

கீரம்பூர், நாமக்கல் வட்டம், நாமக்கல் – 637 207

சப்த தரிசனம்

கோபுரம், விமானம், திருவாயில்,
பிரகாரம், பலிபீடம், உற்சவர், மூலவர்,
இவர்களைப் பார்த்து வணங்குவது
சப்த தரிசனம் ஆகும்.



அருள்மிகு வீரட்டேஸ்வரர் சுவாமி திருக்கோயில்

பில்லூர்.

இறைவன்	:	வீரட்டேஸ்வரர்
இறைவி	:	அருள்மிகு பிரகதநாயகி
தலவிருட்சம்	:	வில்வ மரம்

புராணச்சிறப்பு

பஞ்சபாண்டவர்களில் ஒருவரான அர்ஜுனனால் வழிபட்ட திருக்கோயில் திருமணிமுத்தாற்றில் அமைந்துள்ள பஞ்சஸ்தலங்களில் இதுவும் ஒன்று. இத்திருக்கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் பிரகதநாயகி, விநாயகர், சுப்ரமணியர், காலபைரவர், சனிபகவான், நவக்கிரகங்கள் ஆகிய சுவாமிகளுக்கு தனித்தனி சன்னதிகள் உள்ளது.

தலச்சிறப்பு

இத்திருக்கோயில் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில் ஆகும். படுகை கற்களால் கட்டப்பட்டது. பஞ்சஸ்தலங்களான சுகவனேஸ்வரர், கரபுரநாதர், வீரட்டேஸ்வரர், பீமேஸ்வரர், திருவேலிநாதர் ஆகிய ஐந்து ஸ்தலங்கள் திருமணிமுத்தாற்றங்கரையில் அமைந்துள்ளது.

மேற்படி ஐந்து ஸ்தலங்களையும் ஒரே நாளில் தரிசித்தால் பாவங்கள் அனைத்தும் நீங்கி சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழலாம் என்பது ஐதீகம். பஞ்சஸ்தலங்களில் இத்திருக்கோயிலும் ஒன்றாகும்.

தனிச்சிறப்பு

இக்கோயிலின் வளாகத்திற்குள்ளே அருள்மிகு வீரநாராயணப்பெருமாள் திருக்கோயிலும் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இது சைவ, வைணவ சமயத்தின் ஒற்றுமையைப் பறைசாற்றுகிறது.

திருவிழாக்கள்

பிரதோஷம், தேய்பிறை அஷ்டமி, பௌர்ணமி, ஐப்பசி பௌர்ணமி (அன்னாபிஷேகம்), சிவராத்திரியன்று (4 கால பூஜை) கார்த்திகை தீபம் ஆகிய நாட்கள் விசேஷ பூஜைகள் செய்யப்படுகிறது.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒருகால பூஜை நடைபெறுகிறது

காலசந்தி காலை 9.00 மணி

காலை 6.00 மணிமுதல்	– பகல் 12.00 மணி வரை
மாலை 4.00 மணிமுதல்	– இரவு 7.00 மணி வரை

அமைவிடம்

நாமக்கல் மாவட்டம் பரமத்தியிலிருந்து திருச்செங்கோடு செல்லும் சாலையில் 5கி.மீ. தூரத்தில் உள்ள பில்லூர் கிராமத்தில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

தக்கார் / ஆய்வாளர்

அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில்

பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்



அருள்மிகு கருப்பண்ணசுவாமி பொன்காளியம்மன் வகையறா திருக்கோயில்

இராமதேவம்.

இறைவன்	:	அருள்மிகு கருப்பண்ணசுவாமி
இறைவி	:	அருள்மிகு பொன்காளியம்மன்
தலவிருட்சம்	:	நடுவிழிமரம்

தலச்சிறப்பு

மனநோய் கை, கால் வராதவர்கள் இத்தெய்வத்தின் அருளால் பூரண குணம் அடைகிறார்கள் என்பது ஐதீகம். பலமாவட்டங்களிலிருந்து பக்தர்கள் வருகை தந்து திருமணம் நடைபெறவும், நோய்கள் தீரவும், பல்லி வாக்கு கேட்பது சிறப்பாகும்.

திருவிழாக்கள்

மாசி மாதம் மகா சிவராத்திரி உற்சவம் சிறப்பாக நடைபெறும். ஆடி 18 ஆம் நாள் கருப்பண்ண சுவாமிக்கு சிறப்பு பூஜை மற்றும் அலங்காரம் நடைபெறும்.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி காலை 7.00 மணி

காலை 6.00 மணிமுதல்	–	பகல் 12.00 மணி வரை
மாலை 5.00 மணிமுதல்	–	இரவு 8.30 மணி வரை

அமைவிடம்

இக்கோயில் நாமக்கல் மாவட்டம், பரமத்தியில் இருந்து திருச்செங்கோடு செல்லும் சாலையில் 11 கி.மீ. தொலைவில் இரும்புப்பாலத்தில் இருந்து 3 கி.மீ தொலைவில் இராமதேவம் கிராமத்தில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு கருப்பண்ண சுவாமி திருக்கோயில்

இராமதேவம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் –637 208

பூஜிக்கவேண்டிய மலர்கள்

ஜாதி, நீலோத்பலம், வில்வம், கடம்பு, ஆகிய மலர்களால் அர்த்தயாமத்தில் பூஜிக்க வேண்டும்.



அருள்மிகு பிரசன்ன வெங்கட்டரமணசுவாமி திருக்கோயில்

பாண்டமங்கலம்.

இறைவன்	:	அருள்மிகு பிரசன்ன வெங்கட்டரமண சுவாமி
இறைவி	:	ஸ்ரீதேவி பூதேவி
தலவிருட்சம்	:	வில்வமரம்
ஆகமம்	:	வைகானசம்
தீர்த்தம்	:	வராக புஷ்கரணி

தலவரலாறு

பாண்டவர்கள் இத்திருக்கோயில் அமைந்துள்ள இடத்தில் தங்கியிருந்ததால் இந்த ஊர் பாண்டமங்கலம் எனும் சிறப்பு பெயர் பெற்றது. பாண்டவர்களின் பிரார்த்தனைக்கு இணங்கி இத்திருக்கோயிலின் "பெருமான்" அவர்கள் முன் தோன்றி காட்சி கொடுத்தார் என்பது ஐதீக வரலாறு. பாண்டவர்கள் காலத்தில் கட்டப்பட்ட திருக்கோயில் ஆகும். மதுரையை ஆண்ட பாண்டியராணிக்கு தீராத நோய் இருந்து வந்தது இத்திருக்கோயிலில் அருள் பாலித்து வரும் பெருமாளின் அருட்கருணையையும், புகழினையும், கீர்த்தியினையும் கேள்விப்பட்டு பாண்டியராணி இத்திருத்தலப் பெருமாளை வழிபட்டு வந்ததால் அவருக்கு இருந்த தீராத நோய் தீர்ந்தது. மேலும் இதே போன்று மைசூர் மகாராஜாவிற்கு தீராத நோய் இருந்து வந்தது. இத்திருத்தலப் பெருமாளை வழிபட்டு தரிசித்து வந்ததால் அந்த நோய் தீர்ந்தது. இத்தகைய கீர்த்தியும், பெருமையும் உடைய இத்திருத்தலப் பெருமாள் வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அருளும் கருணைக்கடல். இத்திருக்கோயிலின் மேற்குப்புறம் அருள்மிகு வரதராஜப்பெருமாள், வராக புஷ்கரணி திருக்குளம் அமையப்பெற்றுள்ளது. இத்திருக்குளத்தில் பக்தர்கள் நீராடி எம்பெருமானை கண்குளிர தரிசனம் செய்து வந்தால் தீராத வினைகளும் நோய்களும் தீரும் என்பது பழக்கத்தில் இன்றும் இருந்து வருகிறது. இத்திருக்கோயிலில் கபிலர் மகரிஷி சிலகாலம் தவம் செய்த பெருமை கொண்டது. மூலவர் கருவறை பஞ்ச பாண்டவர்களால் கட்டப்பட்டது.

திருவிழாக்கள்

இத்திருக்கோயிலில் முக்கிய திருவிழா தை மாத தேர்த்திருவிழாவாகும். புரட்டாசி, நவராத்திரி உற்சவம், சித்திரை வருடப் பிறப்பு, கோகுல அஷ்டமி, கார்த்திகை தீபம், யுகாதி பண்டிகை.



பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி	காலை 9.00 மணி
உச்சிகாலம்	மதியம் 12.00 மணி
சாயரட்சை	மாலை 6.00 மணி

காலை 6.00 மணிமுதல் – பகல் 12.30 மணி வரை

மாலை 4.00 மணிமுதல் – இரவு 7.00 மணி வரை

அமைவிடம்

பழமையும், பெருமையும் புராணச்சிறப்பும் மிக்க இத்திருக்கோயில் நாமக்கல் – கரூர் தேசிய நெடுஞ்சாலையில் வேலூரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பாண்டமங்கலம் என்னும் பகுதியில் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு பிரசன்ன வெங்கட்டரமண சுவாமி திருக்கோயில்

பாண்டமங்கலம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் – 637 208



அருள்மிகு பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில்

கபிலர்மலை.

இறைவன்	:	அருள்மிகு பாலசுப்ரமணியர்
தலவிருட்சம்	:	நாவல்மரம்
தீர்த்தம்	:	கபிலர் தீர்த்தம்
ஆகமம்	:	காரண ஆகமம்

புராணச்சிறப்பு

கபில மகரிஷி கபிலர் மலையில் தானாகவே தோன்றிய சுயம்பு மூர்த்தியாக விளங்கிய முருகப்பெருமானை நினைத்து தவம் செய்ததால் இம்மலைக்கு கபிலர் மலை என்ற பெயர் வந்தது. அதன் பிறகு முருகப்பெருமான் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு வணங்கி வந்ததாகக் கூறப்படுகிறது. இக்கபிலர் மலை உச்சியில் கபில தீர்த்தமும் உள்ளது.

தலவரலாறு


கபிலை என்ற காராம் பசுவானது மேய்ச்சலுக்கு புல்லை தேடி அலைந்தபோது, மழை பொய்த்து இருந்த காரணத்தினால்

எங்கு தேடியும் மேய்ச்சல் கிடைக்கவில்லை. பசியால் வருந்திய பசுவானது புல்லைத்தேடி விறகிரி என்ற மலையைச்சென்று அடைந்தது. அம்மலையில் கடும் பசியால் வருந்திய கொடும் புலி ஒன்று காராம் பசுவை பற்றியது. தெய்வத்தின் அருளால் இரக்கமுற்று அப்பசுவினை புலி விட்டது. அப்பசு இரவில் அம்மலையை அடுத்த ஊரில் தங்கிக் கழித்து முடிவில் உயர்பதம் பெற்றது. ஆகவே கபிலையின் சம்பந்தத்தைப் பெற்ற மலைக்கு கபிலர்மலை என்றும், ஊருக்கு கபிலக்குறிச்சி என்ற பெயரும் உண்டானது. இச்செய்தி கபிலை மலைக்கோவை 104வது பாடலில் இதன் வரலாற்றை மிகச்சிறப்பாகத் தெரிவிக்கின்றது.

கபிலர் மலை மேல் உள்ள முருகன் கோவிலுக்கு செல்ல 120 படிகளை கடந்து செல்ல வேண்டும். அடிவாரத்தில் அரசமரத்துப் பிள்ளையார் சன்னதி, 37 படி கடந்து இடும்பன் சன்னதிகள் உள்ளது. மலைக்கோயிலில் இயற்கையான பாறைக்குகை உள்ளது. இங்கு சுயம்புவாகத் தோன்றிய முருகபெருமான் உள்ளார். பின் கபில மகரிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட முருகப்பெருமான் குழந்தை வடிவில் கையில் வேலைத் தாங்கிய வண்ணம் அருள்பாலிக்கிறார். மூலஸ்தானம் அமைந்துள்ள பாறைக் குகையின் துவாரம் ஒன்றில்



எப்போழுதும் தென்றல் காற்று வந்து கொண்டு இருக்கின்றது.



தனிச்சிறப்பு

மூலவர் சுயம்புவாக உருவானவர். பிள்ளைப்பேறு வேண்டுவோர் கிருத்திகை நட்சத்திரத்தில் பாலாபிஷேகம் செய்தும், உத்திரம் நட்சத்திரத்தில் பேச்சு, சங்கீதம் வேண்டுவோர் தேனபிஷேகம் செய்தும் பலன் பெறுகின்றனர். மேலும் புஷ்ப மாலை சாத்தினால் திருமணத் தடை நீங்கியும், பஞ்சமுகதர்ப்பத்தால் அபிஷேகம் செய்தால் விஷ ஜந்துக்களினால் தொல்லை ஏற்படாமலும் இறைவன் காப்பதாக ஐதீகம் உள்ளது.

திருவிழாக்கள்

பங்குனி உத்திரம், மாதக் கிருத்திகை, அமாவாசை, கந்தசஷ்டி ஆகியவை முக்கிய திருவிழாவாகும்.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி	காலை **8.00** மணி
சாயரட்சை	மாலை **5.00** மணி

காலை **7.00** மணிமுதல் – பகல் **12.30** மணி வரை

மாலை **4.00** மணிமுதல் – இரவு **6.00** மணி வரை

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டத்தின்படி தினந்தோறும் 25 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

நாமக்கல் – கரூர் தேசிய நெடுஞ்சாலையில் பரமத்தியிலிருந்து மேற்கே 8 கி.மீ. தொலைவில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. நாமக்கல் மற்றும் பரமத்தி வேலூர் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துவசதி உள்ளது.



தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில்

கபிலர்மலை, பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் – 637 204

தொலைபேசி : 04268 254100



அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

நன்செய் இடையார்.

இறைவி	:	அருள்மிகு மாரியம்மன்

தலச்சிறப்பு

கிழக்கு முகம் பார்த்து அமைந்திருக்கும் இத்திருக்கோயில் அன்னை, பக்தர்களின் வேண்டுதல்களை வேண்டியபடி நிறைவேற்றும் சக்தி வாய்ந்த தெய்வமாக இருந்து வருகிறாள். மாரியம்மனின் அருள் குடிகொண்டவர்கள் தலைமுழுக்க எண்ணெய் தேய்த்து குளித்துவிட்டு, அம்மனுக்கு நன்னீர் ஊற்றி ஏழு நாட்கள் விரதம் இருப்பது இப்பகுதி மக்களின் வழக்கமாக இருந்து வருகிறது. அப்படி இருந்தால் மாரியம்மன் அருளால் தங்களுக்கு எவ்விதப் பிணியும் வராது என்பது ஐதீகம்.

திருவிழாக்கள்

மாசி மாதம் 15ஆம் நாள் திருவிழா சிறப்பாக நடைபெறும். மேற்படி திருவிழாவில் பூக்குண்டம், பூத்தேர், சிறப்பாக நடைபெறுகிறது. அமாவாசை தினங்களில் சிறப்புப் பூஜை நடைபெறுகிறது.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஆறு கால பூஜை நடைபெறுகிறது.

உஷகாலம்	காலை 6.00 மணி
காலசந்தி	காலை 9.00 மணி
உச்சிகாலம்	மதியம் 12.00 மணி
சந்திகாலம்	மாலை 3.00 மணி
சாயரட்சை	மாலை 6.00 மணி
அர்த்தஜாமம்	இரவு 8.00 மணி

காலை 5.00 மணிமுதல் – இரவு 9.00 மணி வரை

அமைவிடம்

இத்திருக்கோயில் நாமக்கல்லில் இருந்து 32 கி.மீ. தொலைவிலும், பரமத்தியிலிருந்து 7கி.மீ தொலைவிலும் மோகனூரிலிருந்து 12 கி.மீ தொலைவிலும் உள்ள நன்செய் இடையார் என்னும் ஊரில் அமைந்துள்ளது. நாமக்கல், பரமத்தி மற்றும் மோகனூர் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி

பரம்பரை அறங்காவலர்

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

நன்செய் இடையார், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் – 638 182



அருள்மிகு சோமேசுவரர் திருக்கோயில்

சேந்தமங்கலம்.

இறைவன்	:	அருள்மிகு சோமேசுவரர்
இறைவி	:	அருள்மிகு சௌந்தரவல்லி அம்பாள்
தலவிருட்சம்	:	வில்வமரம்
ஆகமம்	:	காமீகஆகமம்

புராணச்சிறப்பு

இத்திருக்கோயில் இதிகாச காலத்திற்கு முற்பட்டதெனவும் ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு பெயரால் அழைக்கப்பட்டு வந்ததெனவும் கூறுகின்றனர்.

கிருத யுகத்தில்	–	சோமபுரம் என்றும்,
திரேதா யுகத்தில்	–	சந்திபட்டணம் என்றும்
துவாபர யுகத்தில்	–	கிருஷ்ணாபுரம் என்றும்
கலியுகத்தில்	–	சேந்தமங்கலம் என்றும்

தலச்சிறப்பு

இத்திருக்கோயில் கட்டுமான அமைப்பு பிற்காலச் சோழர் காலத்திலும் சிலபகுதிகள் பல்லவர் காலத்திலும் கட்டப்பட்டதாக கூறுகின்றனர். இத்திருக்கோயிலில் மூலவர் சோமேசுவரர் கிழக்கு நோக்கியும், அருள்மிகு சௌந்தரவல்லி தாயாரும் கிழக்கு நோக்கி அமர்ந்து அருள்பாலிக்கிறார்கள். சனீஸ்வர பகவான் திருநள்ளாரில் இருப்பது போல் கிழக்கு முகமாகவும், சூரிய–சந்திரருக்கு நடுவில் அமர்ந்துள்ளதும் சிறப்பாகும்.

திருவிழாக்கள்

இத்திருக்கோயிலின் பிரமோற்சவம் மாசி மகத்தன்று நடைபெறும் தேர்த்திருவிழாவாகும். நவராத்திரி, மஹா சிவராத்திரி, திருக்கார்த்திகை தீபம், ஆருத்ரா தரிசனம் ஆகிய உற்சவங்கள் நடைபெறுகின்றன.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

உச்சிகாலம் மதியம் 12.00 மணி

சாயரட்சை மாலை 6.00 மணி

காலை9.00 மணிமுதல்	– பகல் 12.00 மணி வரை
மாலை 5.00 மணிமுதல்	– இரவு 7.30 மணி வரை

அமைவிடம்

நாமக்கல் நகரிலிருந்து 13கி.மீ. தொலைவிலுள்ள சேந்தமங்கலத்தில், இராசிபுரம் சாலையில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. நாமக்கல் நகரிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு சோமேசுவரர் திருக்கோயில்
சேந்தமங்கலம், நாமக்கல் வட்டம், நாமக்கல் – 637 409



அருள்மிகு லட்சுமிநாராயணப் பெருமாள் திருக்கோயில்

சேந்தமங்கலம்.

இறைவன்	:	அருள்மிகு நாராயணப் பெருமாள்
இறைவி	:	லட்சுமி
ஆகமம்	:	வைகானசம்

தலச்சிறப்பு

சேந்தமங்கலத்தில் பெருமாளும், சிவனும் ஒன்று சேர்ந்து உறைகின்றனர். இத்திருக்கோயில் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் கோவிந்தப்ப நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டது. இத்திருக்கோயிலில் உள்ள சிற்பங்கள் புகழ் பெற்றவையாகும். கோவிந்தப்ப நாயக்கரின் கோமாளி வடிவச் சிலையும், யாளி, குதிரை மேல் போருக்குச் செல்லும் வீரன், 64 வகை பரதநாட்டிய பாவனைகள் ஆகியவை கலையழகுடன்

செதுக்கப்பட்டுள்ளது. அருள்மிகு லட்சுமி நாராயண பெருமாள் அமர்ந்த திருக்கோலத்தில் லட்சுமித் தாயாரை மடியில் அமர்த்தி அருள்பாலிக்கிறார்.

திருவிழா

இத்திருக்கோயிலின் பிரம்மோற்சவம் எனப்படும் வருடப் பெரும் திருவிழா "மாசி மகத்தில்" நடைபெறும் தேர்த் திருவிழாவாகும்.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி காலை 9.00 மணி
சாயரட்சை மாலை 6.00 மணி

காலை 7.00 மணிமுதல்	– பகல் 11.00 மணி வரை
மாலை 5.00 மணிமுதல்	– மாலை 7.30 மணி வரை

அமைவிடம்

நாமக்கல் நகரிலிருந்து 13கி.மீ. தூரத்தில் உள்ள சேந்தமங்கலம் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ளது. நாமக்கல் நகரிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி
செயல் அலுவலர்
அருள்மிகு லட்சுமிநாராயணப் பெருமாள் திருக்கோயில்
சேந்தமங்கலம், நாமக்கல் வட்டம், நாமக்கல் – 637 409.

ஏழு சிரஞ்சீவிகள்

எளிமையும் வீரமும் சேர்ந்த ஹனுமான்
தர்மம் பெரிதென்ற விபீஷணன்
தானத்திற்கு இலக்கணமான மாபலி
வேதம் வகுத்த வியாசர்
அதர்வண வித்தக அஸ்வத்தாமன்
ஹரிஹர சக்தி பரசுராமன்
ஈஸ்வர பக்தன் மார்க்கண்டேயன்

திருவிழாக்கள்

மாதகிருத்திகை, ஆடிக்கிருத்திகை, தைப்பூசம், கார்த்திகை தீபம், கந்தசஷ்டி மற்றும் பங்குனி மாதம் ஆண்டுத்திருவிழா ஆகியவை முக்கிய திருவிழாக்கள் ஆகும்.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி காலை 10.00 மணி

காலை 7.00 மணிமுதல்	– பகல் 10.00 மணி வரை
மாலை 5.30 மணிமுதல்	– இரவு 8.30 மணி வரை

அமைவிடம்

பெருமைமிக்க இத்திருத்தலமானது நாமக்கல்லில் இருந்து துறையூர் சாலையில் 17 கி.மீ. தொலைவில் எருமைப்பட்டி கைகாட்டி பிரிவில் இருந்து 1கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு திருமலை கதிரேசப்பெருமான் (எ) பாலதண்டாயுதபாணி திருக்கோயில்

எருமப்பட்டி, நாமக்கல் வட்டம், நாமக்கல் – 637 013

ஒன்பது வகையான பக்தி மார்க்கங்கள்

- கேட்டல்
- பாடுதல்
- நினைத்தல்
- பாதங்களை சேவித்தல்
- பூசித்தல்
- வணங்குதல்
- தொண்டு செய்தல்
- நட்பு கொள்ளுதல்
- தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளுதல்



அருள்மிகு பலப்பட்டரை மாரியம்மன் திருக்கோயில்

நாமக்கல் நகர்

இறைவி	:	அருள்மிகு பலப்பட்டரை மாரியம்மன்
தலவிருட்சம்	:	வேப்பமரம்

சிறப்பம்சம்

இத்திருக்கோயில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருத்தலமாகும். அம்மன் சுயம்புவாக உருவானவர். மாரியம்மன் என்றால் மழை தரும் தெய்வம் என்று பொருள். மாரியம்மன் மக்களை நோய்களிலின்று காக்கும் காவல் தெய்வமாக, நான்கு திருக்கரங்களுடன் காட்சி தருகிறார். வலது திருக்கரங்களில் குறுவேல், உடுக்கையும், இடது திருக்கரங்களில் அங்குசமும், அமுதகலசமும் தாங்கியவளாய், இடது திருவடியை மடித்து, வலது திருவடியை தொங்கவிட்டும், ஐந்து தலைகொண்ட நாகம் குடை பிடிக்க பக்தர்களைக் காத்து அருள்புரிகிறார்.


நாமக்கல் பலபட்டரை மாரியம்மன்

அனைத்து மதத்தினரும் வணங்கும் அம்மன்

நாமக்கல் அருள்மிகு பலப்பட்டரை மாரியம்மனை சாதி, சமயவேறுபாடில்லாமல் இந்துக்கள் மட்டுமல்லாது அனைத்து மதத்தினரும் பூஜித்து வருகிறார்கள். இந்துக்களுக்கு மட்டும் இல்லாமல் எல்லா மதத்தினர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றி அருள்பாலித்து வருவதால் பலப்பட்டரை மாரியம்மன் என்று அழைக்கப்படுகிறாள். பலப்பட்டரை மாரியம்மன் வேண்டுவோர்க்கு வேண்டுவன வழங்கும் அருள்மாரியாவாள். கண்நோய் தீர்ப்பதிலும், அம்மை நோய் தீர்ப்பதிலும், மணமாகாதவர்களுக்கு மண வாழ்க்கையும், குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைச் செல்வமும், செல்வம் இல்லாதவர்களுக்கு ஐஸ்வரியமும், நல்ல தொழிலும், கல்வி மேன்மையும், பதவி உயர்வும் என எண்ணற்ற பக்தர்கள் வேண்டுவன பல வாரி வழங்கி வாழ்க்கையில் வளம்பல சேர்க்கும் அருள் நாயகி பலப்பட்டரை மாரியம்மன் ஆவாள்.

திருவிழாக்கள்

சித்திரை, வைகாசி திங்களில் மிகச் சிறப்பாக நடைபெறும்..

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

உச்சிகாலம் மதியம் 12.00 மணி

காலை 6.00 மணிமுதல் –	பகல் 1.00 மணி வரை
மாலை 4.30 மணிமுதல் –	இரவு 9.00 மணி வரை

அமைவிடம்

நாமக்கல் நகரின் மையப்பகுதியில் தேசிய நெடுஞ்சாலையின் ஓரத்தில் நாமக்கல் பாறையின் கிழக்குப் புறமாக அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு பலப்பட்டரை மாரியம்மன் திருக்கோயில்

நாமக்கல் நகர் மற்றும் வட்டம், நாமக்கல் – 637 001

தொலைபேசி எண் : 04286 – 224144



அருள்மிகு துலுக்க சூடாமணியம்மன் திருக்கோயில்

இரா. புதுப்பட்டி

இறைவி	:	அருள்மிகு துலுக்க சூடாமணியம்மன் (எ) மாரியம்மன்
தலவிருட்சம்	:	வேப்பமரம்

தலவரலாறு

திருக்கோயில் அமைந்துள்ள இடத்தில் நவாப் மன்னர் ஒருவர் தனது படை இளைப்பாற முகாம் இட்டபோது, வனாந்திரமாக இருந்த இடத்தில் வளர்ந்திருந்த புற்றினை இடிக்க, குருதிபீறிட்டு நவாப் மற்றும் ஏவலாட்களுக்கு கண் தெரியாமல் போய்விட, நவாப் மன்னர் பணிந்து புற்றிடம் தங்கிய

அம்மனை வேண்டி வழிபட மீண்டும் கண்ணொளி பெற்றதாக இத்திருக்கோயில் திருத்தல வரலாறு கூறுகிறது. மேலும் நவாப் மன்னர் நன்றிக்கடனாக புற்றை சுற்றி கோயில் அமைத்து ஊர் பெரியோர்களைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார். எனவே அம்மனுக்கு துலுக்க சூடாமணியம்மன் என்ற பெயர் உண்டாயிற்று.

தனிச்சிறப்பு

இவ்வம்மனை பக்தியுடன் வேண்டி வழிபட்டால் கண்நோய்கள் நீங்குகின்றன. உடலில் ஏற்படும் கட்டி, மருவு, ஆகியவைகளும் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து போகும். ஊமைகள் பேசவும், செவிடர்கள் கேட்கவும் அளப்பரிய சக்தியை உண்மையான பக்தர்களுக்கு அன்னை அருள்புரிகிறாள்.

திருவிழாக்கள்

வைகாசி மாதம் கடைசி செவ்வாய்க்கிழமை பயிரேற்றிப் பொங்கல் விழா, மாசி விழா முதல் வாரத் திங்கள் கிழமை கம்பம் நடும் விழா, கிராமிய கலைகளான கரகாட்டம், கூத்து ஆகிய நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடைபெறும். பங்குனி மாதம் கடைசி புதன்கிழமை தேர்த்திருவிழா எட்டு நாட்கள் கலைநிகழ்ச்சிகளுடன் வெகு சிறப்பாக நடைபெறும்.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி	காலை 8.00 மணி
உச்சிகாலம்	மதியம் 12.00 மணி
சாயரட்சை	மாலை 6.00 மணி

காலை 6.00 மணிமுதல்	– பகல் 1.30 மணி வரை
மாலை 4.00 மணிமுதல்	– இரவு 7.30 மணி வரை

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டத்தின்படி தினந்தோறும் 25 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

இத்திருக்கோயில் நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகரிலிருந்து வடக்கு பகுதியில் சுமார் 12 கி.மீ. தொலைவில் உள்ள புதுப்பட்டி என்னும் ஊரில் கிழக்கு முகமாக அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு துலுக்க சூடாமணியம்மன் திருக்கோயில்

புதுப்பட்டி, இராசிபுரம் வட்டம், நாமக்கல் – 637 407

தொலைபேசி எண் : 04287 – 244275



அருள்மிகு செங்கமாமுனியப்பன் திருக்கோயில்

பல்லக்காபாளையம்.

இறைவன்	:	அருள்மிகு செங்கமாமுனியப்பன்

தலச்சிறப்பு

முற்காலத்தில் இந்த இடத்தில் சங்கம் புதராக கிடந்ததாகவும் வாரச்சந்தை விற்பனைக்காக கொண்டுவரும் பசு மாடுகள் சங்கம் புதருக்குள் வந்து தன் பாலை தானாக கறந்து விட்டு சென்று விடுமாம். இதனையறிந்த ஒரு மாட்டு



வியாபாரி நான்கு பசுமாடுகளை அதன் பால்மடியை கட்டி விற்பதற்காக சந்தைக்கு கொண்டு வந்தாராம். அந்த நான்கு மாடுகளும் சங்கம் புதருக்குள் சென்று தன்பாலை தானாக கறப்பதை கண்டு வியப்படைந்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை அழைத்து சங்கம் புதரை அகற்றிப் பார்த்தார்களாம். சுயம்புவாக சுவாமி இருப்பதை கண்ணாரக்கண்டு, ஆனந்தமடைந்து மெய்சிலிர்க்க சங்கு முனி என்று பெயர் இட்டு வணங்கினர். இவ்வட்டார மக்களுக்கு காவல் தெய்வமாய் விளங்கி வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அருளி பக்தர்களின் குறைகளையும், கஷ்டங்களையும் நீக்கி அருள்பாலித்து வருகிறார்.

திருவிழாக்கள்

இவ்வாலயத்தில் மார்கழி மாதத்தில் 14 நாட்கள் பொங்கல் திருவிழா மிகச்சிறப்பாக தொன்று தொட்டு நடைபெற்று வருகிறது. தைப்பொங்கல், தமிழ் வருடப்பிறப்பு.



பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி காலை 7.00 மணி

காலை 7.00 மணிமுதல்	– பகல் 11.00 மணி வரை
மாலை 5.00 மணிமுதல்	– இரவு 8.00 மணி வரை

அமைவிடம்


சேலம் – பவானி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சங்ககிரி நகரின் மேற்கே 12கி.மீ. தொலைவில் உள்ள பல்லக்காபாளையம் கிராமத்தில் சாலையில் ஓரத்திலேயே அருள்மிகு செங்கமாமுனியப்பன் திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு செங்கமாமுனியப்பன் திருக்கோயில்

பல்லக்காபாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல்.



அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில்

கோட்டைமேடு, குமாரபாளையம்

இறைவி	:	அருள்மிகு பத்ரகாளியம்மன்
தலவிருட்சம்	:	வில்வமரம்

தலச்சிறப்பு

இத்திருக்கோயில் சுமார் 700 வருடங்களுக்கு முற்பட்டது. மூன்று நிலைகளைக் கொண்ட இராஜ கோபுரம் கண்டோர் கண்ணைக்கவரும் வகையில் அமைந்துள்ளது. மனமார துதித்தால் மன அமைதி தரும் சிறந்த திருத்தலம்.

தேவையற்ற மனக் கவலை, பயம் ஆகியவற்றை நீக்கும் தலம். மன அமைதி கிடைக்கும். கிரகங்களினால் ஏற்படும் தோஷம் இத்திருத்தலம் வந்து வணங்கினால் நீங்கும் என்பது ஐதீகம்.

திருவிழாக்கள்

மாசி முப்போடு மற்றும் பொங்கல் திருவிழா தமிழ் மாதப்பிறப்பு தனுர் மாத பூஜைகள் மற்றும் தைப்பொங்கல் திருவிழாவாக நடைபெறுகிறது

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி	காலை 8.00 மணி
உச்சிகாலம்	மதியம் 12.00 மணி

காலை 7.00 மணிமுதல் – பகல் 12.00 மணி வரை

மாலை 5.00 மணிமுதல் – இரவு 5.00 மணி வரை

அமைவிடம்

நாமக்கல் நகரிலிருந்து 50 கி.மீ. தொலைவிலும், ஈரோடு நகரிலிருந்து 16 கி.மீ. தொலைவிலும், சங்ககிரி நகரிலிருந்து 22 கி.மீ. தொலைவிலும், பவானியிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள குமாரபாளையத்திலிருந்து திருச்செங்கோடு செல்லும் சாலையில் 1 கி.மீ. தொலைவில் உள்ள கோட்டைமேட்டில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.



தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில்

கோட்டை மேடு, குமாரபாளையம்,

திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் – 638 183



அருள்மிகு கல்யாண பிரசன்ன வெங்கட்டரமண சுவாமி திருக்கோயில்

மோகனூர்.

இறைவன்	:	வெங்கடேசப் பெருமாள்
இறைவி	:	ஸ்ரீதேவி, பூதேவி
தலவிருட்சம்	:	வில்வமரம்
ஆகமம்	:	ஸ்ரீ வைகானசம்
தீர்த்தம்	:	காவிரி தீர்த்தம்

தலவரலாறு

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மோகனூரில் பரமபக்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதத்தில் திருப்பதி திருமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளை பிரம்மோற்சவத்தில் தரிசனம் செய்து தன் திருவோண விரதத்தை முடிப்பது அவரது வழக்கம்.



பல ஆண்டுகள் இதனை புனித விரதமாகக் கடைப்பிடித்தார். அவருக்கு ஒரு சமயம் வாதநோய் ஏற்பட்டு புரட்டாசி பிரம்மோற்சவத்திற்காகத் திருமலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. "கோவிந்தனைக் காணாத வாழ்க்கையும் இனி வேண்டுமா ?" என தன் வாழ்வை காவிரி ஆற்றில் முடித்துக் கொள்ளத் தீர்மானித்தார். அப்போது மிகப்பெரிய நாகசர்ப்பமொன்று அவரை தடுத்து துரத்தியது. அயர்வினால் அவர் தூங்கிய போது கனவில் எம்பெருமான் தோன்றி " உன்னால் திருமலைக்கு வர முடியாததால் நானே உன்னைத் தேடி இங்கு வந்துவிட்டேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார். தான் கண்ட கனவினை ஊராரிடம் கூற, அவர்கள் அங்கிருந்த பாம்பு புற்றிற்குச் சென்று பார்த்தனர். அங்கு பெருமாள் ஸ்ரீ தேவி, பூதேவியுடன் திருக்கல்யாண கோலத்தில் காட்சியளித்தார். அதன்படி இத்திருக்கோயில் அமைக்கப்பட்டது. இன்றும் கர்ப்பக்கிரக, அர்த்தமண்டப, மகாமண்டப துவாரங்களில் புற்றுமண் தானாகவே உருவாகி வருவதைக் காணலாம்.



நோய் நிவர்த்தி தரும் ஸ்ரீ தன்வந்திரி பகவான்

முற்பிறவிகளில் செய்த பாவங்களினால் நவக்கிரங்கள் ரோகம் என்ற தோஷத்தை ஏற்படுத்துகின்றன. இத்தகைய தோஷங்களுக்கு தன்வந்திரி பகவானைப் பூஜிப்பது தக்க பரிகாரமாகும். இந்த உண்மையை உணர்த்துவதற்காக ஸ்ரீ தன்வந்திரி சந்தியின் முகமண்டப மேற்படரையில் நவக்கிரக மூர்த்திகள் அனைவரும் அந்தந்த கிரங்களுக்குரிய மரத்தினால் செதுக்கப்பட்டுள்ளதும், சன்னதியின் சுற்று பாதையில் மூன்று புரங்களிலும் தரையில் கூழாங்கற்கள் பதிக்கப்பட்டுள்ளதும் இத்திருத்தலத்தில் மட்டுமே காணக்கூடிய அதிசயம்.

தனிச்சிறப்பு



புரட்டாசி மாதத்திலும், மாசி மாதத்திலும், அமாவாசை ஒட்டிய 3 நாட்கள் சூரியனின் கிரகணங்கள் சுவாமியின் மீது பட்டு, இப்பெருமானை ஆராதிப்பது பக்தர்களை பரவசத்தில் ஆழ்த்தியது.

இங்குள்ள உற்சவ மூர்த்தியான ஸ்ரீ சம்மோகன கோபாலன் ஆனவர் ஆண்டாள் மற்றும் கோபாலன் ஆகிய இருவரும் ஒரே உருவில் பேரெழில் தோற்றத்தில் காட்சியளித்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.



பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒரு கால பூஜை மட்டும் நடைபெறுகிறது.

காலசந்தி காலை 8.00 மணி

காலை 7.00 மணிமுதல் – பகல் 12.00 மணி வரை	
மாலை 5.30 மணிமுதல் – இரவு 8.00மணி வரை	

அமைவிடம்

நாமக்கல் நகரிலிருந்து தெற்கில் 18 கி.மீ தொலைவிலும் பரமத்திவேலூரிலிருந்து 17கி.மீ தொலைவிலும் உள்ள மோகனூரில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு கல்யாண பிரசன்ன வெங்கட்டரமண சுவாமி திருக்கோயில்


மோகனூர், நாமக்கல் வட்டம், நாமக்கல் – 637 015

குடைவரை கோயிலின் குகைச் சிற்பங்கள்

அருள்மிகு நரசிம்ம சுவாமி திருக்கோயில், நாமக்கல்



உலகளந்த பெருமாளின் உன்னத காட்சி



பூதேவியை காப்பாற்றிய வராக அவதாரம்



மும்மூர்த்திகளின் அழகிய காட்சி



நரசிம்மர் ஹிரண்யனை மடியில் வைத்து வதம் செய்த காட்சி





கவின் நயமிக்க கற்சிற்பங்கள்

திருச்செங்கோடு







பத்ரகாளி :
ஈஸ்வரன் தாண்டவத்தை
ரசிக்கும் பத்ரகாளியின் அழகிய சிற்பம்



சதுர்புஜகாஹீ :
நான்கு கைகளுடன் கூடிய சாந்தரூபம்
கொண்ட சதுர்புஜ காளியின்
அழகிய தோற்றம்



அகோரவீரபத்ரர் :
தட்சன் மீது கோபம் கொண்ட
ஈஸ்வரன் தட்சயாகத்தை
அழிப்பதற்காக எடுத்த அவதாரம்



குறவன் :
எழில்மிகு குறவன்
சிற்பம்



ஈஸ்வரர், அர்ச்சுனன் சண்டைக்காட்சி :
ஈஸ்வரன் அர்ச்சுனன் சண்டைக்காட்சி அழகிய சிற்பம்



மன்மதன் :
தேவலோக மன்மதன்
(ரதி மயங்கிய மன்மதன்)



ரதி :
தேவலோக ரதி
(மன்மதன் மயங்கிய ரதி)



அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்

இராசிபுரம்.

இறைவன்	:	அருள்மிகு கைலாசநாதர்
இறைவி	:	தர்மசம்வர்தினி
தலவிருட்சம்	:	வில்வமரம்
ஆகமம்	:	காமீகம்
தீர்த்தம்	:	சிவகங்கை தீர்த்தம்

புராணச்சிறப்பு

கிருத யுகத்தில் இந்திரன் வழிபட்டதால் "இந்திரபுரம்" என்றும், திரேதாயுகத்தில் நவக்கிரகங்கள் வழிபட்டதால் "தேவபுரம்" என்றும், துவாபரயுகத்தில் சித்தர்கள் வழிப்பட்டதால் விசித்திரப்புரமென்றும், கலியுகத்தில் ஆதன் ஓரி வழிப்பட்டதால் ஸ்ரீ இராஜபுரம் என்றும் போற்றப்படுகிறது இத்தலம். சங்க காலத்தில் கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரி வேட்டையாட வரும் போது ஓர் வெண்பன்றியைக் கண்டு அதை துரத்திச் செல்ல அப்பன்றியோ நில்லாமல் இராஜபுரம் என்று அன்று வழக்கில் இருந்த இவ்வூரில் ஓர் புதரில் சென்று மறைந்தது. பன்றி மறைந்த புதர் திசையை நோக்கி அம்பு எய்திய மன்னன், அப்புதரை விலக்கியபோது, பன்றி மறைந்து சுயம்புலிங்கம் இரத்தம் பெருக வெளிப்பட்டது. அதைக்கண்ட வல்வில் ஓரி வருந்தி அழுது துடிக்க இறைவன் திருக்காட்சி நல்கினான். வல்வில் ஓரி வியந்து வணங்கி கருவறை, விமானம் அமைத்து திருக்கோயில் கட்டினான்.

தலச்சிறப்பு

எந்த திருக்கோயிலிலும் இல்லாதவாறு இங்குள்ள கொடி மரத்தில் தலவரலாற்றை குறிக்கும் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இங்கு எழுந்தருளியுள்ள ஆறுமுக பெருமான் மீது அருணகிரி நாதர் "சங்குவார் முடி" என தொடங்கும் பாடலை பாடி திருப்புகழில் அருளியுள்ளார்.

மூலவராக அருள்மிகு கைலாசநாதரும், அறம்வளர்த்த நாயகி, ஆறுமுக பெருமான், பைரவர், சண்டேசுவரர் ஆகியோர் தனி சன்னதி கொண்டு அருள்பாலிக்கின்றனர். தென்திசை நோக்கி உலகில் முதல் குருவாக அமர்ந்து "ஓம்" என்னும் பிரணவத்தின் உட்பொருளை சநகர், சனந்தனர், சநாதனர், சனத்குமாரர் ஆகிய நால்வருக்கு ஸ்ரீ தட்சிணாமூர்த்தி உபதேசம் செய்யும் காட்சி அரிய தரிசனமாகும்.

திருவிழாக்கள்

சித்ரா பௌர்ணமி பிரம்மோற்சவ தேர்த்திருவிழா, திருவாதிரை ஆருத்ரா தரிசனம், தமிழ் வருடப்பிறப்பு, நவராத்திரி, மார்கழிமாத உற்சவம்.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

உச்சிகாலம் மதியம் 12.00 மணி

சாயரட்சை மாலை 6.00 மணி

காலை 6.00 மணிமுதல்	– பகல் 12.30 மணி வரை
மாலை 5.00 மணிமுதல்	– இரவு 8.00 மணி வரை

அமைவிடம்

நாமக்கல்லிலிருந்து 30கி.மீ தொலைவில் உள்ள இராசிபுரம் நகரில் பழையபேருந்து நிலையத்திற்கு தெற்கில் மிகஅருகில் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்

இராசிபுரம் நகர் மற்றும் வட்டம், நாமக்கல் – 637 408



அருள்மிகு நாவலடி கருப்பண்ண சுவாமி திருக்கோயில்

மோகனூர்.

இறைவன்	:	அருள்மிகு நாவலடி கருப்பண்ணசுவாமி
இறைவி	:	செல்லாண்டியம்மன்
தலவிருட்சம்	:	நாவல்மரம்

தலச்சிறப்பு

கருப்பண்ணசாமி நீதி நேர்மைக்கு துணை இருப்பார். நட்டநடு இரவிலும் துணை வருவார். நாவலடி கருப்பண்ண சுவாமி வழிபாடு செய்யும் அன்பர்களுக்கு தன் அருளை வாரி வழங்கும் அருள் ஆற்றல் உடையவர். பக்தர்களின் காவல் தெய்வம் என்பது சிறப்பாகும். நாமக்கல் மாவட்டம் மோகனூரில் அமைந்திருக்கும் இத்தலம் நாவல்மரத்தடியில் அவதரித்த தெய்வம் என்பதால் நாவலடி கருப்பண்ண சுவாமி என்று பெயர்பெற்றது. இத்தெய்வத்திற்கு காப்பாளராக நாய்களே பெரும்பான்மையாக இருந்து வந்தன. சீமத்துரை ஜட்ஜிக்கு

தலைவாசலுக்கும், கோட்டைவாயிலுக்கும் கதவுகள் கிடையாது. வேட்டைநாய்களின் மிகுதியான பாதுகாப்பே ஆகும். இத்திருக்கோயிலில் நீதி பிறழா நெறி முறைகளுக்கு ஏற்றவாறு நாவலடி கருப்பண்ண சுவாமி தரிசனம் செய்பவர்களுக்கு அருள் பாலிக்கிறார். நினைத்த காரியம் செவ்வனே நிறைவேறும் பிரசித்தி பெற்ற பிரார்த்தனை திருத்தலமாகும். இத்திருக்கோயிலுடன் இணைந்து அருள்மிகு மாரியம்மன், அருள்மிகு காளியம்மன் திருக்கோயில்களும் உள்ளது.

திருவிழாக்கள்

பங்குனி மாதம் கடைசி திங்கட்கிழமை முதல் 15 நாட்கள் திருவிழா நடைபெறும். பக்தர்கள் திருவிழாக்காலங்களில் பூ மிதிப்பர். அமாவாசை தினங்களில் சிறப்புப்பூஜை நடைபெறுகிறது.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி காலை 6.00 மணி

காலை 6.00 மணிமுதல் – இரவு 9.00 மணி வரை

அன்னதானம்

இத்திருக்கோயிலின் உபக்கோயிலான அருள்மிகு காளியம்மன் திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டத்தின்படி தினந்தோறும் 40 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

இத்திருத்தலம் நாமக்கல் நகரில் இருந்து 20 கி. மீ தூரத்தில் உள்ள மோகனூரில் இருந்து காட்டுப்புத்தூர் சாலையில் 3 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. நாமக்கல் நகரிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி

பரம்பரை அறங்காவலர்

அருள்மிகு நாவலடி கருப்பண்ண சுவாமி திருக்கோயில்

மோகனூர், நாமக்கல் வட்டம், நாமக்கல் – 637 015. Ph : 04286 256400



அருள்மிகு அண்ணமார் சுவாமி திருக்கோயில்

மோளியப்பள்ளி

இறைவி	:	பெரியகாண்டியம்மன்
தலவிருட்சம்	:	இலுப்பை மரம்

புராணச்சிறப்பு

இங்கு தலைமைத் தெய்வமாய் எழுந்தருளியுள்ள பெரியகாண்டியம்மன் சன்னதி சுமார் 800 ஆண்டுகள் பழமைமிக்கதாகும். வீரமலையை மையமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த மன்னன் ஒருவன் பார்வதி தேவியையே மகளாகப் பெற வேண்டும் எனத் தவம்புரிந்தாகவும், இறைவன் தவத்திற்கு மகிழ்ந்து அன்னை பராசக்தியையே அவனுக்கு மகளாக இருக்குமாறு ஆணையிட்டதாகவும், அதன் படி தவமியற்றிய அரசன் கரங்களில் மகளாக அன்னை வந்ததாகவும் புராணம் கூறுகிறது. அன்னை வளர்ந்தவுடன் தவமியற்றத் தந்தையிடம் அனுமதி பெற்றுச் சேடியருடன் தலந்தோறும் சென்றதாகவும் இத்தலத்திலுள்ள பொழுது இதன் சீர்மை கண்டு புற்றினுள்



வசித்து வந்ததாகவும், கருவூர்ச்சித்தர் அன்னையின் மேன்மையறிந்து இங்குள்ள மூலஸ்தானத்தை கட்டி அன்னையை பெரியக்காண்டியம்மன் என்ற பெயரில் பிரதிட்டை செய்ததாகவும் புராணம் பேசுகிறது. நெல்லிவிள நாட்டினை ஆண்டு வந்த குன்னுடையார் என்ற குறுநிலமன்னருக்கு பொன்னர் சங்கர் என்ற மக்கள் தில்லைப் பெருமான் திருவருளால் பிறக்கின்றனர். அவர்கள் அரிய போர்ப் பயிற்சிகளை ராக்கியண்ண ஆசாரியிடம் கற்று நாட்டை நல்ல முறையில் ஆட்சி செய்து இருவரும் இங்கு தங்கி அன்னை பெரியக்காண்டியம்மனை வழிபட்டதாகவும் வரலாறு கூறுகிறது.

அண்ணமார் எனப் போற்றப்படும் பொன்னர் சங்கர் இருவரும் தம் வளநாட்டை நன்முறையில் ஆட்சி செய்து வருகின்ற பொழுது, பங்காளிகள் சூழ்ச்சியால் இயற்கை எய்துகின்றனர். அவர்களின் தங்கை அருள்கன்னி என்கிற தங்காயம்மாள் அன்னையை வணங்கிக் கூவ இறையருளால் இருவரும் உயிர் பெற்று பின் வீர சுவர்க்கம் அடைகின்றனர்.

சோழ மன்னன் எழுவக்கரியான் என்னும் தவசீலன், பொன்னர் சங்கர் மற்றும் தங்காயம்மாள் மூவருக்கும் இத்திருத்தலத்தில் சன்னதிகள் கட்டிக் குடமுழுக்குச் செய்தான். கொங்குக்குமரி பிள்ளைத்தமிழ் என்ற நூலில்

"பொன்னர் சங்கர் தந்தே அரசுரிமை மீட்டளித்தாய்" என்று வருவதும் அண்ணமார் சுவாமிகளின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது.

தலஅமைப்பு

மூலவர் பெரியக்காண்டியம்மனும், முன் மண்டபத்தில் விநாயகர், பொன்னர் சங்கர் தங்காயி சுதை வடிவிலும் எழுந்தருளியுள்ளார்கள், வெளிச்சுற்றில் பூதங்களும் பிற தெய்வங்களும் உள்ளன. ஆலய நுழைவாயிலில் கன்னிமார் ஆலயமும் உள்ளது.

திருவிழாக்கள்

சிவன்ராத்திரி விழா மிகச்சிறப்பாக 3 நாட்கள் நடைபெறுகிறது. தேரோட்டமும் உண்டு. மாதந்தோறும் அமாவாசை நாட்களில் சிறப்பு பூஜை நடைபெறுகிறது.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒருகால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி காலை 6.00 மணி

காலை 6.00 மணிமுதல் – இரவு 8.00 மணி வரை

அமைவிடம்

இத்திருத்தலமானது நாமக்கல் திருச்செங்கோடு சாலையில் ராயர்பாளையம் என்னும் நிறுத்தத்திலிருந்து 2 கி.மீ தொலைவில் உள்ள மோளியப்பள்ளியில் உள்ளது. திருச்செங்கோட்டிலிருந்து மோளியப் பள்ளிக்கு பேருந்து வசதிகள் உள்ளன.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு அண்ணமார் சுவாமி திருக்கோயில்

மோளியப்பள்ளி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் – 637 201



அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்

இராசிபுரம் நகர்.

இறைவி	:	அருள்மிகு அங்காளம்மன்

தலசிறப்பு

தற்போதைய மூலஸ்தானமாக இருக்கும் இடத்தில் சுயம்பு உருவாக அன்னை தோன்றியதை ஊர் உலகத்திற்கு முன்னிலைப்படுத்தி ஆகமவிதிகளின்படி அருள்மிகு அங்காளம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. தற்போதைய வெளி பிரகாரம் உள்ளிட்ட இடத்தில் கல்மண்டபம் மற்றும் அன்னையின் மற்றொரு அவதாரமாக உள்ள பேச்சியம்மன் என்கிற பூங்காவனதாய் என்கிற பெரியாண்டவர் சன்னதி மற்றும் காவல் தெய்வங்களாக உள்ள வீரபத்திரர் உடன் ராகு, கேது தெய்வங்களுடன் ஸ்ரீ ராஜ கணபதி, வேல் மயில்முருகன் ஸ்வாமி சன்னதிகளுடன் கூடிய அர்த்த மண்டபம் மற்றும்

அன்னைக்கு இருபுறம் வாயிலில் இரு பெண் காவல் தெய்வங்கள் உடன் நந்திகேஸ்வரர் அன்னையின் திருப்பாதம், ஊஞ்சல் மற்றும் கம்பீர கொடிக்கம்பத்துடன் உள்ள மகா மண்டபம் அதன் வலப்புறத்தில் அன்னையின் பிரதான காவல் தெய்வங்களான இருளப்பன், பாவாடையன், பேச்சியம்மன் (மடியில் குழந்தை உருவுடன் உள்ளது) மற்றும் மதுரை வீரன் உடன் வெள்ளையம்மா, பொம்மி, விநாயகர் ஆகியோர் அருள்பாலிக்கிறார்கள்.

இத்திருக்கோயிலில் தற்போது புதியதாக திருப்பணிகள் நடைபெற்று தங்க முலாம் பூசப்பட்ட செம்பாலான விமானமும் அமைக்கப்பட்டுள்ளது வெகு சிறப்பாகும்.

திருவிழாக்கள்

பங்குனி உத்திரம், விநாயகர் சதுர்த்தி, புரட்டாசி நவராத்திரி, மாதகிருத்திகை

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒருகால பூஜை நடைபெறுகிறது

காலசந்தி காலை 9.00 மணி

காலை 6.00 மணிமுதல் – இரவு 8.00 மணி வரை

அமைவிடம்

நாமக்கல்லில் இருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள இராசிபுரம் நகரின் மையப்பகுதியில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

பரம்பரை அறங்காவலர்

அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்

இராசிபுரம் நகர் மற்றும் வட்டம், நாமக்கல்– 637 408



அருள்மிகு லட்சுமி நாராயண சுவாமி திருக்கோயில்

குமாரபாளையம்

இறைவன்	:	அருள்மிகு லட்சுமி நாராயண சுவாமி, ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வரர்
இறைவி	:	ஸ்ரீ விசாலாட்சி
தலவிருட்சம்	:	அத்தி மரம்
ஆகமம்	:	பாஞ்சராத்திரம்

தலச்சிறப்பு

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் நகரம் கிராமமாக இருந்து வந்த காலந்தொட்டே இவ்வூரில் முதற்கோவிலாக அமையப்பெற்றது ஸ்ரீ லட்சுமி நாராணயசுவாமி திருக்கோயில், ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வரர், ஸ்ரீவிசாலாட்சி திருக்கோயிலாகும்.



எம்பெருமான் ஸ்ரீமத் நாராயணன் மடியில் ஸ்ரீ தேவியாம் இலக்குமி சமேதரராய் அருள்பாலிக்கும் விதத்தில் உள்ளதால் ஸ்ரீ லட்சுமி நாராயண சுவாமி என்ற திருப்பெயர் பெற்றுள்ளது. இம்மூல விக்ரகம் காவேரியாற்றில் இருந்ததாகவும் அதனை எடுத்து பிரதிஷ்டை செய்ததாகவும் முன்னோர் வாயிலாக உணர முடிகிறது. அப்பொழுது கருங்கல்லால் சிறிய கோயிலாக குனிந்து செல்ல கூடிய அளவில் தான் கட்டப்பட்டு இருந்தது. மூலவிக்ரகம் ஸ்ரீ லட்சுமி நாராயண சுவாமி மிகவும் கம்பீரமாக அமைந்து இருந்ததால் மக்கள் நிறையவே சென்று வழிப்பட்டு கொண்டிருந்தார்கள். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் குலதெய்வ வழிபாடும், யாக பூஜை செய்து வரும்பொழுது ஒரு பெண்மணிக்கு அருள்வந்து இந்த திருக்கோயிலில் பெரிய ஆஞ்சநேயர் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது என்று சொல்லி சென்றார்கள். அதன் பின் ஆறு, ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு பொதுமக்கள் அனைவரும் கோயிலை புதியதாக கட்ட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அப்பொழுது கோயிலுக்கு



கூகலூர் ஐயர் ஒருவர் தினசரி பூஜை செய்து விட்டு சென்றுவிடுவார். அவரும் சுவாமிக்கு திருக்கல்யாண உற்சவங்கள் நிறைய செய்து கோயில் சீக்கிரம் கட்டிமுடிக்கப்பட வேண்டும் என்று சங்கல்பம் செய்தது திருப்பணி வேலை ஆரம்பிக்கஅவருடைய பூஜையும் ஒரு காரணமாக இருந்தது. அதன்பிறகு 19½ அடி ஆஞ்சநேயர் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

மேலும் இத்திருக்கோயில் வளாகத்திலேயே ஸ்ரீகாசி விசாலாட்சி உடனமர் ஸ்ரீ காசி விசுவேசுவர சுவாமி சன்னதி அமைந்துள்ளது.

தனிச்சிறப்பு

இத்திருக்கோயில் உள்ள ஆஞ்சநேயர் திருவுருவம் 19½ அடி உயரம் கொண்டது. இது தமிழகத்தின் 2வது மிகப்பெரிய மூர்த்தியாக கருதப்படுகிறது. பக்தர்கள் மனநிறைவோடு தங்கள் கஷ்டங்கள் சொல்லி வழிபடுவோர்க்கு ஸ்ரீ ஆஞ்சநேயர் அருள்பாலிக்கிறார்.

திருவிழாக்கள்

ஸ்ரீ ராமநவமி, சிவன்ராத்திரி, நவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, ஆருத்ரா தரிசனம், அனுமன் ஜெயந்தி

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி   காலை 8.00 மணி

உச்சிகாலம் மதியம் 12.00 மணி

காலை 7.00 மணிமுதல் – பகல் 12.00 மணி வரை	
மாலை 5.00 மணிமுதல் – இரவு 8.00 மணி வரை	

அமைவிடம்

நாமக்கல் நகரிலிருந்து 50 கி.மீ. தொலைவிலும், ஈரோடு நகரிலிருந்து 16 கி.மீ. தொலைவிலும், சங்ககிரி நகரிலிருந்து 22 கி.மீ. தொலைவிலும், பவானியிலிருந்து 2 கி.மீ. தொலைவிலும் உள்ள குமாரபாளையத்தில் காவிரி ஆற்றங்கரையோரத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு லட்சுமி நாராயண சுவாமி திருக்கோயில்

குமாரபாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் – 638 183





அருள்மிகு காந்தமலை பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில்

மோகனூர்

இறைவன்	:	அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி
தலவிருட்சம்	:	பூவரசு மரம்
ஆகமம்	:	கௌமாரம்

தலவரலாறு

மோகனூரில் வடகிழக்கில் உள்ள கரடே காந்தமலையாகும். அன்பு கடவுள் முருகனானவன் தன் தாய் தந்தையரிடம் ஞானப்பழம்வேண்டி கோபமுற்று செல்லுகின்ற போது சிறிது நேரம் இங்கு தங்கினாரெனக் கூறுவர். அன்று

முதல் முருகன் அமர்ந்து சென்ற பூவரசு மரத்தினடியில் முருகன் சிலையை வைத்து வழிபட்டதாகவும், பிற்காலத்தில் கோயில் ஏற்பட்டதாக கூறுகின்றனர். மூலவர் மேற்கு நோக்கி கண்டாரைக் காந்தமென இழுக்கும் அழகுத் தோற்றத்துடன் தண்டாயுதபாணியாகக் காட்சியளிக்கிறார். இத்திருக்கோயில் ஞானிகள் பலரால் வழிபாடு கொண்டது.

தனிச்சிறப்பு

காந்தமலை என்றால் உயர்ந்த மலை இல்லை, கவர்ந்திழுக்கும் எழில் கொண்ட குன்றின் மேல் காந்தமலை என்ற இடத்தில் முருகன் நின்ற கோலத்தில் பக்தர்களுக்கு சிவ வேடத்தில் இருந்து அருள்பாலிக்கிறார் என்பது சிறப்பம்சமாகும். (காவடி எடுத்தல் மிகச்சிறப்பு)

திருவிழாக்கள்

தைப்பூசம், சித்ரா பௌர்ணமி, கார்த்திகை தீபம், ஆடிக்கிருத்திகை, பங்குனி உத்திரம் மற்றும் அருணகிரியார் ஜெயந்தி.



பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது

காலசந்தி காலை 8.00 மணி
சாயரட்சை மாலை 5.00 மணி

காலை 7.00 மணிமுதல் – பகல் 12.30 மணி வரை	
மாலை 4.00 மணிமுதல் – இரவு 7.00 மணி வரை	

அமைவிடம்

நாமக்கல்லிலிருந்து 16கி.மீ தொலைவிலும் பரமத்தி வேலூரிலிருந்து 11கி.மீ தொலைவிலும் உள்ள மோகனூரில் இத்தலம் அமைந்துள்ளது. நாமக்கலில் இருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு காந்தமலை பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில்
மோகனூர், நாமக்கல் வட்டம், நாமக்கல் – 637 015

பன்னிருகை வள்ளல்

யானைக்கு ஒருகை.
மனிதருக்கு இருகைகள்.
இந்திரனுக்குக் கரங்கள் நான்கு.
விநாயகருக்கு ஐந்து.
தத்தாத்ரேயருக்கு ஆறு.
அக்கினிக்கு ஏழு.
பிரம்மனுக்கு எட்டு.
சிவபெருமானுக்குப் பத்து.
முருகப் பெருமானுக்கு பன்னிரெண்டு திருக்கரங்கள்
பன்னிரு கரங்களால் வாரி வாரி வழங்கும் வள்ளல் முருகனே.



அருள்மிகு அழியா இலங்கை அம்மன் திருக்கோயில்

கூனவேலம்பட்டி.

இறைவி	: அருள்மிகு அழியா இலங்கை அம்மன்
தலவிருட்சம்	: வேம்பு

தல வரலாறு

இலங்கையில் இராவணனின் நந்தவன காவல் தெய்வமாக இந்த அழியா இலங்கை அம்மன் இருந்து வந்த காலத்தில் சீதையை இராவணன் சிறையெடுத்துச் சென்று அசோகவனத்தில் சிறை வைத்ததாகவும் இந்த அம்மன் தான் காவல் தெய்வமாக இருந்து வந்ததாகவும்,சீதையை மீட்டுவர ஆஞ்சநேயர் அங்குவந்த போது இராவணனின் காவல் தெய்வமான அழியா இலங்கை அம்மன் ஆஞ்சநேயரை தடுத்ததாகவும்,இதனால் கோபமுற்ற ஆஞ்சநேயர் ராமபிரானை நினைத்து வழிபட்டு இராவணனின் காவல் தெய்வமான அழியா இலங்கை அம்மனை தனது வாலால் சுருட்டி வீசி எறிந்ததாகவும், இலங்கையில் இருந்து ஆஞ்சநேயரால் வீசப்பட்ட மேற்படி அம்மன் இந்த கூனவேலம்பட்டி புதூர் கிராமத்தில் அப்போதிருந்த மா, பலா, தென்னை மரங்கள் நிறைந்த ஊஞ்சவனத்தில் மண்புற்று புதராக மண்டி கிடந்த (தற்போது அம்மன் உள்ள இடம்) இடத்தில் தலை கீழாக வந்து விழுந்து பாதம் மேல்புறமாகவும் தலை, உடல் உட்புறமாக மண்புற்றுக்குள்

அம்மன் குடி கொண்டு விட்டது எனவும் ஊரில் வரலாறு சொல்கின்றனர். இப்பாதமே தற்போது மூலவராக வழிபட்டு வரப்படுகிறது. ஆயா கோயில் என்றும் அழைக்கபடுகிறது.

இதே நேரத்தில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பக்திமான்களின் கனவில் சென்று, தான் மேற்படி மண்புற்றில் குடியிருப்பதாகவும், இந்த இடத்தை சுத்தம் செய்து தன்னை வணங்கி வழிபடும் பக்தர்களுக்கு பாம்பு உருவில் தரிசனம் தருவேன் என அம்மன் கூறியதாகவும் ஊரில் வரலாறு சொல்கின்றனர். சுப காரியங்களுக்கு பல்லி வாக்கு கேட்பதும், அம்மன் அமைந்துள்ள இடத்தில் இருந்து தான் போகவேண்டிய திசையில் வால் நீண்ட கருங்குருவி சென்றால் சுப காரியங்களுக்கு சகுணமாக கருதுவது வழக்கத்தில் உள்ளது.

திருவிழா

தமிழ் வருடம் ஐப்பசி மாதம் தீபாவளிக்கு அடுத்து வரும் வியாழன், வெள்ளிக்கிழமையன்று வருடாந்திர திருவிழா நடைபெறுகின்றது.

பூஜை, நடைதிறந்திருக்கும் நேரம்

தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது

உச்சிகாலம் மதியம் 12.00 மணி

காலை 5.00 மணிமுதல்	– பகல் 12.30 மணி வரை
மாலை 4.00 மணிமுதல்	– இரவு 7.00 மணி வரை

அமைவிடம்

இராசிபுரம் நகரிலிருந்து மேற்கே 3 கி.மீ. தொலைவில் கூனவேலம்பட்டி புதூரில் வடக்கு பார்த்து சன்னதியாய் இத்திருக்கோயில்அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு அழியா இலங்கை அம்மன்திருக்கோயில்

கூனவேலம்பட்டி புதூர், இராசிபுரம் வட்டம், நாமக்கல் – 637 401



அருள்மிகு கதிரேசப் பெருமான் (எ) பாலதண்டாயுதபாணி திருக்கோயில்

எருமப்பட்டி.

இறைவன்	:	அருள்மிகு பாலதண்டாயுதபாணி
இறைவி	:	வள்ளி, தேவசேனா
தலவிருட்சம்	:	நாவல்மரம்

தலவரலாறு

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை கதிர்காமத்தில் இருந்து வந்த இரண்டு சாதுக்கள், கொல்லிமலை சாரல்களில் வந்து பலதலங்களை தரிசனம் செய்து கொண்டிருக்கும்போது எங்கும் கிடைக்காத அமைதி, பெருமை இங்கு கிடைத்தமையால் பெரியோர்களாலும், பொதுமக்களின் ஆதரவாலும் இத்தலம் அமைக்கபெற்று கதிர்காமம் கதிரேசப்பெருமான் (எ) பாலதண்டாயுதபாணி என்று பெயர்

சூட்டி தரிசனம் செய்து வருகின்றனர். சதுரகிரி என்றும் சஞ்சீவி மலை என்றும் வழங்கக்கூடிய கொல்லிமலைக்கு தென்பாகத்திலும் தலைமலை என்று சொல்லக்கூடிய சஞ்சீவி ராயன் மலைக்கு வடபாகத்திலும் அமைந்துள்ளது. திருமலை கதிரேசப்பெருமான் என்கிற பாலதண்டாயுதபாணி கோயில் பிரசித்தி பெற்ற திருக்கோயிலாகும்.

தனிச்சிறப்பு

சின்னஞ்சிறுவனாக காட்சியளிக்கும் தண்டாயுதபாணியின் திருத்தலத்தில் ஈசான பாகத்தில் நவநாகர்களும், சனீஸ்வரனும், . சதுர்வேதஸ்வரூபமான அத்தி, அரசு, நாவல், வேம்பு ஆகிய மரங்களின் கீழ் சிவபெருமானும் வீற்றிருப்பது மிகவும் சிறப்பாகும்





ஊர்த்துவ தாண்டவமூர்த்தி
அம்பாளை நடனப் போட்டியில் வெற்றி கொண்ட
ஊர்த்துவ தாண்டவமூர்த்தி அழகிய சிற்பம்



வேட்டுவச்சி
குழந்தை மற்றும்
பூஜைக்கூடையுடன்
வந்த எழில்மிகு
வேட்டுவச்சியின் சிற்பம்



வேடன்
வேடன் அழகிய சிற்பம்



கிளி, சர்ப்பம் மற்றும் புராண கதைகளைக் கொண்ட கற்சிற்பம்



வீரபத்திரர்
அசுரனை அழித்த வீரபத்திரர்



அழகிய கல் கூஜா
இரண்டு தூண்களுக்கு
நடுவில் உள்ள கல்
கூஜா தோற்றம் அழகிய சிற்பம்




யோகாசன நிலை :
ஒரு தலையுடன் ஆறு உடல் சேர்ந்த யோகாசனங்களை
உணர்த்தும் அழகிய சிற்பம்



நவதுவார பலகணி :
மேற்கு நோக்கிய சன்னதியில் முன்வாசல் இல்லாத
குறை நீக்கி நவதுவாரா பலகணி அழகிய சிற்பம்



வடக்கு ராஜகோபுரம் அடிப்பகுதி நுண்ணிய
வேலைப்பாடுகளுடன் கொண்ட கல் சிற்பம்



செங்கோட்டு வேலவர் சன்னதி முன்பு கிளி கொத்தும்
கல் தாமரைப் பூ



ஆமை மண்டபம்

ஈசன் ஆசனத்தை தாங்கி நிற்கும் மலர் சொறியும்
ஆமை மண்டபத்தின் அழகிய தோற்றம்



நரசிம்மர் :
எழில்மிகு யோக நரசிம்மர்
காட்சி அழகிய சிற்பம்



ஈஸ்வரர், அர்ச்சுனன்
வில் சண்டைக்காட்சி

அருள்மிகு கல்யாண பிரசன்ன வெங்கட்ரமண சுவாமி திருக்கோயில்

மோகனூர்.



நவக்கிரஹ மூர்த்திகளுக்குரிய,
மூலிகை விருட்சங்களால் அமைக்கப்பட்ட மரச்சிற்பம்

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

திருக்கோயில்களின் அன்னதானத் திட்டம்
சேலம் இணை ஆணையரின் மண்டலத்தில் நாமக்கல் மாவட்டத்தில்
அன்னதான திட்டம் நடைபெறும் கோயில்கள்

1	அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயில், நாமக்கல் நகர்
2	அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு நகர்
3	அருள்மிகு கைலாசநாதர்திருக்கோயில், திருச்செங்கோடு நகர்
4	அருள்மிகு நைனாமலை வரதராஜப்பெருமாள் திருக்கோயில் சேந்தமங்கலம்
5	அருள்மிகு நாவலடி கருப்பண்ணசுவாமி திருக்கோயில், மோகனூர்
6	அருள்மிகு பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில், கபிலர்மலை
7	அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், குமாரபாளையம்
8	அருள்மிகு மாரியம்மன் செல்லாண்டியம்மன் திருக்கோயில், இராசிபுரம் நகர்
9	அருள்மிகு துலுக்க சூடாமணியம்மன் திருக்கோயில், இரா. புதுப்பட்டி
10	அருள்மிகு ஆஞ்சநேயர்சுவாமி திருக்கோயில், மெட்டாலா
11	அருள்மிகு கந்தசாமி திருக்கோயில், காளிப்பட்டி
12	அருள்மிகு அத்தனூர் அம்மன் திருக்கோயில், அத்தனூர்

மேலே குறிப்பிட்டுள்ள திருக்கோயில்களில் பக்தர்கள் தாங்கள் குறிப்பிடும் தினத்தில் அன்னதானம் செய்வதற்கு குறிப்பிட்ட தொகை செலுத்தினால் அந்த தினத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

அன்னதான நன்கொடை செலுத்துபவர்கள் வருமானவரிச்சட்டம் **80G** ன் கீழ் வருமான வரிவிலக்கு பெறலாம்.

இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, சேலம் மண்டலம்.



நாமக்கல் ஆஞ்சநேயர்

அஸாத்ய ஸாதக ஸ்வாமிந்
அஸாத்யம் தவகிம் வத!
ராமதூத க்ருபா ஸிந்தோ!
மத்கார்யம் ஸதாய ப்ரபோ!

யாராலும் சாதிக்க முடியாத
காரியங்களையும் சாதிக்க
வல்லவரான ராமதூதனே !
கருணைக் கடலே !
என்னுடைய காரியங்களையெல்லாம்
சாதித்துத் தருவீராக.

நாமக்கல் மாவட்ட
திருக்கோயில்கள் வரைபடம்



1) அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயில், நாமக்கல்
2) அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோயில், திருச்செங்கோடு
4) அருள்மிகு மாரியம்மன் செல்லாண்டியம்மன் திருக்கோயில், இராசிபுரம்
6) அருள்மிகு அசலதீபேஸ்வரர் திருக்கோயில், மோகனூர்
9) அருள்மிகு அறப்பளீஸ்வரர் திருக்கோயில், கொல்லிமலை
10) அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், நைனாமலை, சேந்தமங்கலம்
12) அருள்மிகு அத்தனூர் அம்மன் திருக்கோயில், அத்தனூர்
13) அருள்மிகு கந்தகிரி பழனியாண்டவர் திருக்கோயில், ரெட்டிப்பட்டி
15) அருள்மிகு தத்தாத்ரேயசுவாமி திருக்கோயில், தத்தகிரி, சேந்தமங்கலம்
21) அருள்மிகு பாண்டுரங்கர் திருக்கோயில், குமாரபாளையம்
23) அருள்மிகு கந்தசாமி திருக்கோயில், காளிப்பட்டி
28) அருள்மிகு பிரசன்ன வெங்கட்டரமணசுவாமி திருக்கோயில், பாண்டமங்கலம்
29) அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில், கபிலர்மலை
34) அருள்மிகு நாவலடி கருப்பண்ணசுவாமி திருக்கோயில், மோகனூர்
37) அருள்மிகு லட்சுமி நாராயணசுவாமி திருக்கோயில், குமாரபாளையம்
42) அருள்மிகு துலுக்க சூடாமணியம்மன் திருக்கோயில், இரா.புதுப்பட்டி
45) அருள்மிகு கல்யாண பிரசன்ன வெங்கட்ரமணசுவாமி திருக்கோயில், மோகனூர்